விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | மாசி 01 திங்கட்கிழமை (13.02.2006) | தொலைபேசி 222 3378 | ஒலி 56

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# துணைப்படைகளின் ஆயுதங்களை களைய ஜெனீவாப் பேச்சில் அரசு இணங்கக்கூடாது

## ஜாதிக ஹெலஉறுமய வேண்டுகோள்

(கொழும்பு)

**ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின்போது இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணைப்படைகளின் ஆயுதங்களை களைவதற்கான இணக்கத்தை அரசாங்கம் வழங்கக்கூடாது என ஜாதிக ஹெலஉறுமய கோரியுள்ளது.**

**ஜெனீவாப் பேச்சில் பங்குகொள்ளும் அரச பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்ட ஜாதிக ஹெலஉறுமயப் பிரதிநிதிகள் இவ்வாறு கூறியுள்ளனர்.**

ஜெனீவாப் பேச்சுக்களின்போது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்பது தொடர்பாக மாத்திரமே ஆராயப்படவேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் அரசு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இணங்கக்கூடாதென ஹெலஉறுமயவும், ஜே.வி.பியும் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இலங்கையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை திருத்துவதே அவசியம்.

அதனைவிடுத்து துணைப்படைகள் ஆயுதங்களை களைவது, இராணுவக்காவலரண்கள் குறைப்பது என்பது தொடர்பாக எந்தவொரு உறுதிமொழியினையும் வழங்கக்கூடாதென ஹெலஉறுமய கோரியுள்ளது. (ச–4)

## காயமடைந்த சிப்பாய் நேற்றுக்காலை மரணம்

(கொழும்பு)

தலைமன்னார் கடற்பரப்பில் நேற்று முன்தினம் காயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கடற்படைச் சிப்பாய் நேற்றுக்காலை உயிரிழந்தார். காயமடைந்த கடற்படைச் சிப்பாய்க்கு அவசர சத்திரசிகிச்சை வழங்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனளிக்காது அவர் உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தலைமன்னாரிலிருந்து 10 கடல்மைல் தூரத்தில் மீன்பிடிப் படகொன்றை கடற்படையினர் வழிமறித்தபோது அதிலிருந்த நால்வர் அதனை வெடிக்கவைத்து தற்கொலை செய்தபோது அக்கடற்படைச் சிப்பாய் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–7)

## பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகள் குழு இன்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு

(கொழும்பு)

பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகள் இன்று கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளனர். அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து உரையாடவுள்ளதாக இந்த அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

வாக்குரிமை பெற்றுள்ளபோதிலும் வாக்களிக்கமுடியாத நிலையிலுள்ள வடக்கு - கிழக்கின் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்களின் நிலை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவே அங்கு செல்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் தேசிய அடையாள அட்டையை மட்டுமல்லாது வேறு ஏதாவது அடையாள அட்டையை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் பிரயோகிக்க தேர்தல் ஆணையாளர் அனுமதிக்கவேண்டும்.

இதுகுறித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து உத்தரவொன்றைப் பெறும் நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுவருகின்றோம்.

அடுத்து 2004 ஆம் ஆண்டிற்குப் பின்னர் 18 வயதை அடைந்தவர்கள் இந்தத் தேர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கப் பேச்சுவார்த்தைக் குழுவினர் ஊடகங்களுக்குப் பேட்டியளிக்கத் தடை

ஜெனீவா பேச்சுவார்த்தைக்குச் செல்லும் அரச தூதுக் குழுவினருக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு எத்தகைய நேர்காணலையும் கொடுக்கவேண்டாமென இவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்கு அரச தூதுக்குழு தெரிவிக்கும் கருத்துக்களினால் சிலவேளை ஜெனீவா பேச்சுவார்த்தையில் ஏற்படும் சங்கடங்களைக் குறைப்பதற்காக இக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

இதேவேளை அரச தூதுக் குழுவினருக்கு அலரி மாளிகையில் நடைபெறும் விசேட பயிற்சி நெறிகளில் தவறாது கலந்துகொள்ளவேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ் விசேட பயிற்சி நேரங்களின்போது வெளி வைபவங்களைத் தவிர்க்கும்படியும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச–4)

## இளவாலையில் கிளைமோர் மீட்பு

இளவாலைப் பகுதியில் மறைத்து வைத்ததாகக் கூறப்படும் கிளைமோர்க்குண்டு ஒன்றை இராணுவத்தினர் மீட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இராணுவத்தினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொள்ளப்பட்ட போது மேலும் 5 குண்டுகள் மீட்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-39)

## தனித்துப்போட்டியிட ஹெல உறுமய முடிவு

ஹெல உறுமய இம்மாதம் 15 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளது. தாங்கள் போட்டியிடவிருக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட மட்டக்களப்பில் 24 சுயேட்சைக் குழுக்கள்!

(மட்டக்களப்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களின் பிரதிநிதிகள் சுயேட்சைகளாகப் போட்டியிடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழரசுக்கட்சி, ஜே.வி.பி, ஐ.தே.க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜனநாயக ஐக்கிய முன்னணி, தேசிய காங்கிரஸ், ஈ.பி.டி.பி. உள்ளிட்டோர் தமது முகவர்களை நியமிக்க விண்ணப்பித்துள்ளனர் எனவும்,

24 சுயேட்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.கிருஸ்ணானந்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி, ஐ.தே.க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் வேட்பாளர் பட்டியலுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுள்ளன. இருப்பினும் இதுவரை 4 சுயேட்சைக் குழுக்கள் மட்டுமே வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன என அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள சுயேட்சைக்குழுவிற்கு தலைமை வேட்பாளராக ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணியின் தேசிய அமைப்பாளரான வெல்லாவெளி பிரதேசசபைத் தலைவருமான இராசையா துரைரட்ணம் போட்டியிடுகின்றார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச சபைக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவா செல்லும் முஸ்லிம் பிரதிநிதி நாளைய கூட்டத்தில் தெரிவாவார்

### அமைச்சர் பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஜெனீவாவில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களின்போது முஸ்லிம் தரப்புப் பிரதிநிதியாக யாரை அனுப்புவது என்று நாளை பாராளுமன்றக் கூட்டத்தொகுதியில் இடம்பெறும் கலந்துரையாடலின் பின்னர் அறிவிக்கப்படுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினரும் நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சருமான ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் அங்கம்வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து குழுவொன்றினை நியமித்து இருந்தோம். அவர்கள் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதியுடனும்

(12 ஆம் பக்கம் பார்க்க)






நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வேட்பு மனுக்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் நேற்று முன்தினம் ஆலோசிக்கப்பட்டதாக கூட்டமைப்பின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார்.

கொழும்பு மாவட்டத்தில் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தையின் போது இணக்கப்பாடு காணப்பட்டது.

மேலும் ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் நிறுத்தப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி இறுதி வேட்பாளர் பட்டியல் தயாரித்து, அதனை உறுதிப்படுத்தும் பணிகள் இன்று ஆரம்பமாகும் என்றும் அவர் மேலும் கூறினார். (க-7)

# இடமாற்றம்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய கே.எஸ். வசந்தகுமார் வவுனியா மாவட்டச் செயலகத்தில் உதவி மாவட்டச் செயலாளராக இடமாற்றம் பெற்று பதவியேற்றுள்ளார். (து)

# 15 இலட்சம் குடும்பங்களுக்கான பாரிய திட்டம்

(கொழும்பு)

கிராமப்புறங்களில் 15 இலட்சம் குடும்பங்களை இலக்காகக் கொண்ட பாரிய அபிவிருத்தித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 500 பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், அவர்களுக்கான வீடமைப்பு, வேலைவாய்ப்பு, அவர்கள் சார்ந்த துறைகளை அபிவிருத்தி செய்தல் என்பனவே இத் திட்டத்தின் நோக்கமாகுமெனவும் தொழில் அமைச்சின் ஊடாக இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதெனவும் அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

சகல பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக சமுர்த்தித்திட்டம் போன்று இதனை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு இத் திட்டத்தின் மூலம் வீடமைப்புக் கடன்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

அரச வங்கிகள் மூலம் நூற்றுக்கு 5 வீத இலகுவட்டியுடன் இக் கடன் வழங்கப்படவுள்ளது.

தொழிற்பயிற்சிகள், யுவதிகளுக்குத் தாதிப்பயிற்சி மற்றும் குடும்பங்களுக்கான ஆலோசனை முதலியனவும் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (து)

# புதிய கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு சபீனா அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் புதிய கட்டடத் திறப்புவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் எட்டு இலட்சம் ரூபா நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இப் புதிய கட்டடத்தினை பங்காளித்துவ நிறுவனத்தின் முகாமையாளர் கே. மகேந்திரன் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

மழலைகள் கல்விப் பூங்காவின் அபிவிருத்திச் சபைத் தலைவர் திருமதி.த.இந்துமதி தலைமையில் இடம்பெற்ற விழாவில் டாக்டர் பே.பிலிப்ஸ் கல்விப் பூங்காவின் பெயரினைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் வணபிதா டொ. இரவிச்சந்திரன், பூ.வேலுப்பிள்ளை, கிராமசேவையாளர் எஸ். பரமானந்தம், டாக்டர் திருமதி லியோன் புஸ்பராணி உட்பட வேறும் பலர் உரையாற்றினர். (து-16)

## 'நாட்டைக் கட்டியெழுப்புவோம்'

# இரண்டாவது கட்டத்தை துரிதமாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

அரசாங்கத்தின் 'நாட்டைக் கட்டியெழுப்புவோம்' என்ற வேலைத் திட்டத்தின் 2ஆவது கட்டத்தை துரிதமாக ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் தொடர்பான பூரண அறிக்கையொன்றை உடனடியாக தயாரிக்குமாறும் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இவ் வருடம் இத்திட்டத்தை அமுல்படுத்தவென ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினர்களுக்கும் 25 இலட்சம் ரூபா வீதம் அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாவட்டங்கள் உட்பட நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அரசாங்க தகவல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-9)

# அறிவித்தல்

## தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச்சங்கம் - சாவகச்சேரி (பதிவு எண் 249/5)

### பதினைந்தாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2006

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் 19.02.2006 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு (இலங்கை நேரம்) யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில், சங்கத்தலைவர் திரு. நா. தண்டாயுதபாணி தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திரு.எஸ்.ஸ்ரீநிவாசன் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகரசபை ஆணையாளரும் யாழ்.மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கங்களின் சமாசத் தலைவருமாகிய திரு.சி.வீ.கே.சிவஞானம் அவர்களும் வருகை தரவுள்ளனர். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது வருகை தரும்படி விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். கூட்டத்திற்கு வருகை தரும் அங்கத்தவர்களுக்கு 2006 இற்கான பஞ்சாங்கக் கலண்டர் வழங்கப்படும். (160)

| திரு.நா.தண்டாயுதபாணி | திரு.வே.சிவப்பிரகாசம் | Dr.இ.கந்தையா.JP |
|---|---|---|
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |

# இராசிபலன்

**13.02.2006**
**(மாசி 01, திங்கட்கிழமை)**
**பூரணை முற்பகல் 10.55 மணிவரை**
**ஆயிலியம் சித்தம் முற்பகல் 10.07**
**இராகுகாலம் 8.04-9.34 மணிவரை**
**சுபநேரம் 12.34-2.04 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தாய்வழி உறவு, எதிர்பாராத நன்மை, நிலைமாற்றம், மனச்சோர்வு. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பெருமையடைதல், பொருள்சேர்க்கை, உறவினர் உதவ |
| மிதுனம் | விவாதம், பொருள்விரயம், பூர்வ புண்ணிய கருமம், திடீர் நன்மை. |
| கடகம் | நண்பர்கள் சந்திப்பு, புதிய திருப்பம், நல்ல முயற்சி, போசனநன்மை. |
| சிங்கம் | பிரயாணம், காரிய அலைச்சல், அமைதிக் குறைவு, அதிக செலவு. |
| கன்னி | எதிர்பாராத நன்மை, உறவினர் வருகை, கீர்த்தி, முயற்சி கைகூடும். |
| துலாம் | தெய்வசிந்தை, அதிக செயற்பாடு, முயற்சி பலிதம், போசனநன்மை. |
| விருச்சிகம் | மாதர் நட்பு, தொழில் நன்மை, பிரயாணம், கட்டுப்பாடு. |
| தனுசு | அபகீர்த்தி, காரிய தடங்கல், உடல் நலக் குறைவு, பிரயாண பயம். |
| மகரம் | தெய்வசிந்தை, முயற்சி கைகூடும், அபூர்வ சந்திப்பு, விருந்துபசாரம். |
| கும்பம் | சகோதரர் உதவி, சொத்துக்களால் நன்மை, காரிய சித்தி, போசன சுகம். |
| மீனம் | வியாபார நன்மை, முயற்சி தாமதம், பண விரயம், கௌரவக்குறைவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும். இந்தக் கூட்டத்துக்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# அபராதம் விதிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் உள்ள உணவகம் ஒன்றில் சுகாதாரப் பரிசோதகரினால் திடீர்சோதனை நடத்தப்பட்ட போது அங்கு சுகாதார சீரின்மை காணப்பட்டதால் உரிமையாளருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் 2000 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி வாரப் போட்டிகளில் சிறந்த உணவகமாக தெரியப்பட்டு இவ்வுணவக உரிமையாளருக்கு நகரசபையினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து-108)

# மெய்வல்லுநர் போட்டியும் வைரவிழா நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியும், வைரவிழா சிறப்பு நிகழ்வும் எதிர்வரும் 15, 16ஆம் திகதிகளில் ஆரம்ப, இடைநிலைப் பிரிவுகளாக அதிபர் எஸ்.கனகராசா தலைமையில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

15ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ள ஆரம்பப் பிரிவு-மாணவரின் நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் லோகநாதன், மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை பிரதிமுகாமையாளர் கா.சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெறவுள்ள இடைப்பிரிவு மாணவரின் விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வீபாலசிங்கமும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை கோட்டக் கல்வி அதிகாரி ச.கைலாசநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (து-7)

# பாவிக்கப்பட்ட ரயர்களை சேகரிக்கும் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

பாவிக்கப்பட்ட ரயர்களைச் சேகரிக்கும் நிலையங்களை அமைப்பதற்கு சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தத் திட்டத்துக்கு உதவி வழங்க பல தனியார் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இது குறித்து அமைச்சின் செயலாளர் ரவி ஜயலத் திஸாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

பழுதடைந்த ரயர்களை உபயோகித்து புதிய பல பொருட்களைத் தயாரிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என்று கூறினார்.

இவ்வாறு ரயர்களை எரிப்பதனால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதையும், நுளம்புகள் பெருகும் இடங்களாக ரயர்கள் இருப்பதையும் தடுக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார். (க-7)

# அமெ.சார்பான நடவடிக்கைகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ—

## விக்கிரமபாகு கருணாரத்தின குற்றச்சாட்டு

அரசாங்கமும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமெரிக்க சார்பான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருவதாக புதிய இடதுசாரிக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் நலனிலேயே அதிக அக்கறை கொண்டுள்ளதாகக் குற்றம்சாட்டி வந்த ஜனாதிபதி தற்சமயம் அமெரிக்கா சார்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் அமெரிக்கா சார்பான நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டிருப்பதை நன்கு தெரிந்துகொண்டும் ஜே.வி.பி அமைதியாக இருப்பது தமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

## ஆழிப்பேரலையில் சிக்கி

# 3,372 மாணவர்கள் 126 ஆசிரியர்கள் பலி

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது பாடசாலை மாணவர்களில் 3ஆயிரத்து 372 பேரும், 126 ஆசிரியர்களும் உயிரிழந்திருப்பதாக அண்மையில் வெளியான அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் உதவியுடன் 'அக்சன் எயிட்' எனும் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 6ஆயிரத்து 610 மாணவர்களும் 331 ஆசிரியர்களும் அங்கவீனமடைந்துள்ளனர்.

49ஆயிரத்து 230 மாணவர்களும் ஆயிரத்து 689 ஆசிரியர்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

74 பாடசாலைகள் முழுமையாக சிதைவடைந்துள்ளன. 108 பாடசாலைகள் அரைவாசி சேதமடைந்துள்ளதாகவும் 'அக்சன் எயிட்' அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# நிரந்தர சமாதானம் ஏற்பட்டாலே அபிவிருத்தி பற்றிப்பேச முடியும்

## பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசகர்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் அழிந்து போயிருக்கும் வட-கிழக்கு மாகாணத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்கு சமாதானம் மிகவும் அத்தியாவசியமாகும். சமாதானம் ஏற்படுத்தப்படாத வரை இங்கு அபிவிருத்தி பற்றி நாம் பேசுவதில் எத்தகைய பயனும் ஏற்படப்போவதில்லை. எனவே நிலையான சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு அனைவரும் பாடுபட முன்வரல் வேண்டும்.

இவ்வாறு பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசகரான வீ.ஜீ.தங்கவேல் சாவகச்சேரியில் கடந்த வெள்ளியன்று நடாத்தப்பட்ட 'சமாதானமும் அபிவிருத்தியும்' பற்றிய பயிற்சிப் பட்டறையில் விரிவுரையாற்றும் போது தெரிவித்தார்.

கொழும்பு மனிதநேய அமைப்புக்களின் கூட்டிணைப்பின் அனுசரணையுடன் அறவழிப் போராட்டக்குழுவும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றமும் இணைந்து நடாத்திய இப் பயிற்சிப் பட்டறையில் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் பங்குகொண்டிருந்தனர்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் உபதலைவர் நமசிவாயம் சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஆலோசகர் தங்கவேல் தொடர்ந்து உரையாற்றும் போது,

நாட்டில் இனத்துவ முரண்பாடுகள் ஏற்படுவதற்கு முன் பல அரசியல் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆயினும் கூட அவை யாவுமே நடைமுறைப்படுத்தப்படாமல் போயுள்ளன. இதனால் நாட்டில் பிரச்சினைகள், முரண்பாடுகள், நம்பிக்கையின்மை போன்றவை பலம்பெற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

தமிழ்மொழிக்கும் அரசியலமைப்பில் சமமான அந்தஸ்து கொடுக்கப்பட்டதாகக் கூறிக்கொள்கின்ற போதும் யதார்த்த நிலையில் அது சரிவர அமுல்படுத்தப்படுவதில்லை. இன்னமும் மத்திய அரசிடம் இருந்து வருகின்ற சுற்றறிக்கைகள், கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் யாவும் சிங்கள மொழியிலே வருகின்றன.

இந்த நிலையை மாற்றுவதற்கு நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். மேலும் எம் மத்தியில் ஏற்பட்டுள்ள போர் வடுக்கள் இன்னமும் எம் மத்தியில் பல அனுபவப் பாடங்களையும் கீறல்களையும் ஏற்படுத்தியுள்ளன.

யுத்தத்தினால் அழிக்கப்பட்ட சாவகச்சேரி நகரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு பல நாடுகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்த போதிலும் கூட யுத்தம் பற்றிய பீதியும் அச்சமும் மக்களை இன்னமும் கொதி நிலையில் தான் வைத்துள்ளது. அதன் பொருட்டு நிதி வழங்கும் நிறுவனங்கள் சாவகச்சேரியில் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்கத் தயக்கம் காட்டி வருகின்றன எனக் குறிப்பிட்டார்.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் அங்கு விரிவுரையாற்றும் போது,

மக்கள் மத்தியில் முரண்பாடுகள் தப்பபிப்பிராயங்கள், நம்பிக்கையீனங்கள் அதிகரித்துக் காணப்படுவதால் நல் எண்ணங்கள், நல்ல சிந்தனைகள் எமது சமுதாயத்தில் இருந்து தூரவிலகிச் சென்றுள்ளன. இந்த நிலையில் எம் மத்தியில் சமாதானம் அபிவிருத்தி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

தனி மனித சமாதானம், குடும்ப சமாதானம், கிராமிய சமாதானம், நகர சமாதானம் ஆகியவை பிரதேசத்தின் சமாதானத்துக்கு வழிவகுப்பதாக அமையவேண்டும். முதலில் நாம் எமக்குள் அன்புள்ளவர்களாகவும் சமாதானம் உள்ளவர்களாகவும் இருத்தல் அத்தியாவசியமானதாகும். அப்போது தான் அபிவிருத்திப் பணியில் நாம் ஈடுபடமுடியும் என்றார்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் உபதலைவர் நமசிவாயம் சிவபாலன் தனது தலைமையுரையில் குறிப்பிடும் போது,

இரண்டாயிரமாம் ஆண்டில் சாவகச்சேரியில் இடம்பெற்ற யுத்தத்தினைத் தொடந்து அழிந்த நகரைப் புனரமைப்புச் செய்வதற்கு நிறுவனங்கள் முன்வரவில்லை. அழிந்து போயுள்ள சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை புனரமைக்கப்படவில்லை. இங்கு நிலையான சமாதானம் இல்லாமையே அடிப்படைக் காரணமாகவுள்ளது என்று கூறப்படுகின்றது.

சமாதானம் ஏற்படுத்தப்பட்டால் தான் அபிவிருத்தியை முன்னெடுக்கமுடியும். எனவே நிலையான சமாதானத்தை ஏற்படுத்த நாம் எல்லோரும் முயலவேண்டும் என்று தெரிவித்தார்.

பயிற்சிப்பட்டறையில் பங்கு பற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. திட்ட இணைப்பாளர் வீ.சிவாகரன் நன்றியுரை வழங்கினார். (து-16)

## அறக்கட்டளைக்கு ரூ. 600 மில்லியன்

## சந்திரிகாவின் கோரிக்கையை நிராகரித்தார் மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆட்சிக்காலத்தில் தம்மை தலைவராகக் கொண்டு உருவாக்கிய அறக்கட்டளைக்கு ஒதுக்கிக் கொண்ட ரூ.600 மில்லியனை வழங்கவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

அலரி மாளிகையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மஹிந்தவுடனான நேரடிச் சந்திப்பில் சந்திரிகா குமாரதுங்க இதை வலியுறுத்தினார்.

இந்தப் பணத்தை வழங்குவது சட்டவிரோதம் அல்ல என்றாலும் தமது பணத்தை முறைகேடாக ஒதுக்கியதாக மக்கள் அதிருப்தியடைவார்கள் என்று கூறி சந்திரிகாவின் கோரிக்கையை மஹிந்த நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி பொறுப்பிலிருந்து தாம் விலகுவதற்கு முன்பாக கலாசாரம் மற்றும் விளையாட்டு மையங்களுக்கான ஜனாதிபதி நிதியம் என்ற பெயரில் சந்திரிகா அறக்கட்டளை ஒன்றைத் தொடங்கினார்.

இந்த அறக்கட்டளையின் தலைவராக சந்திரிகாவும் முன்னாள் கல்வி அமைச்சு செயலாளர் தாரா டி மெல் சந்திரிகாவின் கூடுதல் செயலாளர் சித்திர அதுரகிரிய ,பிரதி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க , ஓட்டப் பந்தய வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

சந்திரிகாவை தலைவராகக் கொண்ட இந்த அறக்கட்டளைக்காக ரூ.600 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யவும் சந்திரிகா ஒப்புதல் அளித்திருந்தார்.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் இந்த நிதி ஒதுக்கீட்டுக்கான காசோலைகளை இரத்துச் செய்தார்.

இந்த நிதியைப் பெறுவதற்காகத்தான் அரசாங்கம் கொடுத்த மாதிவெல நிலத்தையும் சந்திரிகா திரும்ப ஒப்படைத்திருக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

மாதிவெல நிலத்தின் மதிப்பு ரூ.300 மில்லியன் என்று கூறப்படுகிறது. மேலும் சந்திரிகாவுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட அரசாங்க வசதிகளையும் ஜனாதிபதி பொறுப்பில் இருந்த போது திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டதையும் சந்திரிகா விட்டுக்கொடுக்க முன்வந்துள்ளார்.

மாதிவெல நிலம் மற்றும் அரசாங்க சலுகைகளை விட்டுக்கொடுத்து ரூ 600 மில்லியன் தனது அறக்கட்டளைக்கு மாற்றிக் கொள்ளும் நோக்கத்துடனேயே சந்திரிகா இத்தகைய காய்நகர்த்தல்களை மேற்கொண்ட போதும் மஹிந்த கைவிரித்துவிட்டமையால் சந்திரிகா ஏமாற்றமடைந்திருப்பதாக சுதந்திரக் கட்சியினர் தெரிவித்தனர். (து)

## இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கான மானியத் தொகை நிறுத்தப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில் செயற்பட்டு வரும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் நிறுவனத்துக்கு அரசாங்கம் அளிக்க வேண்டிய மானியத் தொகை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த 6மாத காலத்தில் ரூ.17.5 பில்லியன் எண்ணெய் விற்பனை நடந்து ள்ளதாகவும் இதனடிப்படையில் அரசாங்கம் தனது மானியத்தை வழங்க வேண்டும் என்றும் அந் நிறு வனம் வலியுறுத் தியுள்ளது.

அரசாங்கத் தரப்பில் இரு தரப்பு ஒப்பந்தப்படி ரு.1.2 பில்லியன் மானியத் தொகை அளிக்கப்பட வேண்டியுள்ளது.

இருப்பினும் இந்த நிறுவனத்துக்கான மானியத் தொகை வழங்குவது தொடர்பிலும் அதனது வருமானம் மற்றும் இலாபக் கணக்குகள் தொடர்பிலும் அரசாங்கம் சந்தேகம் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கம் மானியத் தொகை வழங்காமையினால் இந்திய நிறுவ னத்தின் வங்கிக் கடன் வட்டிஅதிகரித்துள்ளதாகவும் இலாபமதிப்பு வீழ்ந்துள்ளதாகவும் அந் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். மேலும் அதன் பங்கு மதிப்பும் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். (து)

## செபக்கூடம் திறப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதான சந்தியில் உள்ள விஷமிகளால் தகர்க்கப்பட்ட வழிபாட்டுச் செபக்கூடம் எதிர்வரும் 25 ஆம் திகதி மக்கள் வழிபாட்டுக்கு திறந்து வைக்கப்படும் எனத் தெரிய வருகின்றது. (து-72)





பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரியில் விளையாட்டுத்துறையில் சாதனைகளை நிகழ்த்திய மாணவிகளை மலாயன் சாண்டோ நடராஜா உடற்பயிற்சி நிலையத்தினர் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவை மல்யுத்த வீரர் எஸ்.செல்வநாயகம் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், உடற்பயிற்சி நிலைய ஆசிரியர் எஸ். சித்திரவேலாயுதம் உரையாற்றுவதையும், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட விரிவுரையாளர் எம். நடராஜசுந்தரம், கல்லூரி பிரதி அதிபர் திருமதி எஸ்.பாலேந்திரா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# பக்தர்கள் மூன்று விதம்

ஓர் ஊரில் பெரியவர் ஒருவர் இருந்தார்.

அவர் ஒரு கோடீஸ்வரர். பல நல்ல காரியங்களை அவர் செய்துகொண்டிருந்தார்.

அவரைத் தேடி பலர் வருவார்கள். இவரும் தன்னால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்வது வழக்கம்.ஒரு சமயம் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள்.

"இவரிடமிருந்து ஏதாவது பொருளுதவி பெறவேண்டும்" என்று நினைத்துத் தான் அந்தப் பிச்சைக்காரர்கள் வந்தார்கள்.

ஆனால் மூன்று பேரும் ஒரே நேரத்தில் வரவில்லை. தனித் தனியாக வந்தார்கள்.

முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான். அவன் கோடீஸ்வரரின் முன்னால் சென்று நின்று "ஐயா! எனக்கு ஐந்து ரூபாய் வேண்டும்... தயவுசெய்துகொடுங்கள்!" என்று கேட்டான்.இவன் இப்படிக் கேட்டதும் அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

"என்ன இது? நான் ஏதோ உன்னிடம் கடன்பட்டிருப்பது போலவும்... நீ அதைத் திருப்பிக்கொடு என்று கேட்பது போலவும இவ்வளவு அதிகாரத்தோடு பிச்சைக்கேட்கிறாயே?... எவ்வளவு துணிச்சல் உனக்கு? உனக்கு ஐந்து ரூபாய் எல்லாம் தர முடியாது இந்தா இரண்டு ரூபாய்... எடுத்துக் கொண்டு ஓடு!" என்று சொல்லி கோடீஸ்வரர் ஒரு இரண்டு ரூபாயைத் தூக்கி எறிந்தார்.

பிச்சைக்காரன் அதை எடுத்துக் கொண்டு அங்கிருந்து சென்று விட்டான்.அடுத்தபடியாக பகல் வேளையில் ஒரு பிச்சைககாரன் வந்தான்.

இவன் கோடீஸ்வரரிடம் எப்படிக் கேட்டான் தெரியுமா? "ஐயா!... நான் மூன்று நாளாக ஒருவேளை உணவு கூட சாப்பிடவில்லை.... தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள்!" என்றான்."உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்று அவர் கேட்டார்.

"நீங்களாகப் பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்!" என்றான் பிச்சைக்காரன்.அவர், "இந்தா பத்து ரூபாய்... இதை வைத்துக்கொள்... ஏதாவது வாங்கிச் சாப்பிடு!" என்றார்.அவன் அந்தப் பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

அதன் பின்னர் மாலையில் மூன்றாவது பிச்சைக்காரன் வந்தான். இவன் கேட்ட விதம் எப்படி தெரியுமா? "மகாராஜா! உங்களுடைய உயர்ந்த குணத்தைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன் அதனால் உங்களைப் பார்த்து தரிசனம் செய்துவிட்டு போகலாம் என்று வந்தேன் .தர்ம வழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் தான் கண்கண்ட தெய்வம்!" என்றான்.

உடனே அந்த பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா? "ஐயா! தயவு செய்து உட்காருங்கள்.... நீங்கள் மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள்....முதலில் சாப்பிடுங்கள்... மற்றவற்றைப் பிறகு பேசலாம்" என்று சொல்லி அவனை உட்கார்ரவைத்து சாப்பாடு போட்டார்.

அவன் சாப்பிட்டு முடித்தான். அதன்பிறகு கோடீஸ்வரர் அவனிடம் "இப்போது சொல்லுங்கள்... நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?" என்று வினவினார்.

அவரது அன்புக்கு அந்தப் பிச்சைக்காரன் மனம் நெகிழ்ந்து "ஐயா... பசியோடு வந்தேன்... நீங்கள் அறுசுவை விருந்தே படைத்துவிட்டீர்கள்... எனக்கு அதுபோதும்! வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் என் மீது காட்டும் அன்பை நான் எப்போதும் மறக்கமாட்டேன். உங்களுக்கு எல்லாம் நல்ல படியாக நடக்கும்.. உங்களுக்கு ஒரு குறையும் வராது!" என்று கூறினார்.

இவனுடைய பரிவான இந்த வார்த்தைகள் அவர் மனதைத் தொட்டன. அவருக்கு அவன் மீது இருந்த அன்பு பல மடங்கு அதிகமாயிற்று .அதன் விளைவு என்ன தெரியுமா?

"இதோ பாரப்பா... இனிமேல் நீ வெளியில் எங்கேயும் போக வேண்டாம்... இங்கேயே இருந்துவிடு!" என்று அவர் தெரிவித்தார்.தன்னுடைய பங்களாவிற்குப் பக்கத்திலேயே அவர் அந்த ஆளுக்கு ஒரு வீடும் கட்டிக்கொடுத்தார்.

கடைசி வரையில் அந்த ஆளை அவர் தனக்குப் பக்கத்தி லேயே வைத்துக்கொண்டார்.

இந்தக் கதையின் கருத்து என்ன தெரியுமா?

இறைவன் அந்தக் கோடீஸ்வரர் போன்றவராம். அந்த மூன்று வகை பிச்சைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம்.

இன்றைக்கு இருக்கும் பக்தர்களெல்லாம் இந்த மூன்று வகையில் ஏதாவது ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள். முதல் வகை தான் அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# குடாநாட்டில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துள்ளனவாம்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரு மாதங்களில் யாழ். குடாநாட்டில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துள்ள தாக மனித வுரிமை ஆணைக்குழுவில் யாழ். மாவட் இணைப்பாளர் ரோகித பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் கடந்த டிசம்பர் , ஜனவரி ஆகிய மாதங்களிலேயே மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்திருந்ததாக தேசிய மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ரோகித பிரியதர்ஷன சுட்டிக்காட்டியுள்ளார்.

டிசம்பர், ஜனவரி மாதகாலப் பகுதியில் யாழ். குடாநாட்டில்பரவலாக இடம்பெற்ற அடையாளம் தெரியா தோரினால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள், அரச படைகள் மீதான தாக்குதல்கள், எதிர்த்தாக்குதல்கள் இராணுவ சுற்றிவளைப்பு தேடுதல்கள், கைதுகள் மற்றும் இனந்தெரியாத வகையில் இடம்பெற்ற ஆள் கடத்தல் காரணமாக மக்கள் பீதிக்கு உள்ளாகியிருந் தார்கள் .

இந்தச் சூழ் நிலையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக மனிதவுரிமை ஆணைக் குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகள் பற்றி குறிப்பாக ஆட்கடத்தல் மற்றும் காணாமல் போனவர்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ரோகித பிரியதர்ஷன பி.பி.சி. தமிழ் சேவைக்கு விளக்க மளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

100 பேர் டிசம்பர் , ஜனவரி மாதங்களில் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

முகமூடி மற்றும் கறுப்பு உடை அணிந்து கொண்டு கொச்சைத் தமிழில் பேசி வீடுகளுக்கு வந்து பலரை கடத்திச் சென்ற சம்பவங்கள் தொடர்பாகவே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவர்கள் இராணுவத்தின் பாதுகாப்புடனேயே இந்த ஆட்கடத்தலில் ஈடுபடுவதாக முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் இராணுவத்தினரிடம் இது பற்றிக் கேட்ட போது இக் கடத்தல் மற்றும் கைது சம்பவங்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனக் கூறுகின்றனர்.

இதேவேளை, மீனவர்கள் தொழிலில் ஈடுபட இராணுவத்தினர் தடைவிதிப்பதாக எமக்கு கிடைத்த முறைப்பாடுகள் குறித்தும் மீனவர்கள் தாக்கப்படுவது, காணாமல் போனமை குறித்த முறைப்பாடுகள் பற்றியும் நாம் இராணுவத்தினருடன் கலந்துரையாடி மீனவர்களை மீண்டும் தொழிலில் ஈடுபடச்செய்யவும் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

இதேசமயம் யாழ். குடாநாட்டில் உள்ளபிரதான வீதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருப்பதுடன் வீதிகளில் உள்ள காவலரண்களை பலப்படுத்தி வருகின்றதாக முறைப்பாடு சில கிடைத்துள்ளன.

சில பகுதிகளில் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். ஆனாலும் எவரும் கைது செய்யப்பட்டதாக எமக்கு தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இருப்பினும் இத்தகைய நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கியுள்ளது என்றார்.(க-9)

# 25000 பேர் வன்னிக்கும் 500பேர் தமிழகத்திற்கும் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலிருந்து கடந்த இரண்டு மாதங்களில் மட்டும்25 ஆயிரம் பேர் வன்னிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

அதேநேரம் வடக்கு- கிழக்கு பகுதிகளில் இருந்து 500 இற்கும் அதிகமானோர் படகு மூலம் தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமுக்குச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் இருந்து 13 குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள் 14 பேரும் பெண்கள் 6 பேரும், ஆண்குழந்தை ஒன்று பெண்குழந்தைகள் 4 என 25 பேர் பேசாலை கடற்கரையில் இருந்து வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு புறப்பட்டு வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு தனுஸ்கோடி அரிச்சல் முனை கடற்கரைப் பகுதிக்கு போய்ச் சேர்ந்தனர்.

பின்னர் அங்கிருந்து வான்மூலம் முகுந்தராயர் சத்திரம் பொலிஸ் சோதனைச் சாவடிக்கு சென்ற அகதிகளிடம் கடற்பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தினர். இதனையடுத்து அகதிகள் 25 பேரையும் தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பைபர்கிளாஸ் படகுக்கு வாடகையாக தலா ரூபா 5 ஆயிரம் கொடுத்து வந்ததாக விசாரணையின் போது இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து அனைவரையும் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பிவைத்தனர்

வெள்ளிக்கிழமை வரைதமிழகம் வந்த அகதிகளின் எண்ணிக்கை 500 ஆக உயர்ந்துள்ளது .தொடர்ந்தும் பல குடும்பங்கள் இடம்பெயரத் தயாராகியுள்ள போதும் படையினரின் மிரட்டல்களுக்கு அஞ்சி குடா நாட்டிலேயே தங்கியிருப்பதாகவும் அதேபோல மேலும் பல குடும்பங்கள் தமிழ் நாட்டிற்கு படகு மூலம்செல்வதற்கு தயாரான நிலையில் உள்ளன என்றும் தெரிய வருகிறது.

நிலைமை இப்படியிருக்க இடம் பெயர்ந்து சென்றவர்களைப்பற்றி அவதூறான வகையில் குடாநாட்டின் சில பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன அண்மைக்காலமாக கடத்தப்பட்டு காணாமல் போனவர்களையும் தாம்மீட்டுத்தருவதாகவும் குறிப்பிட்டு யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தின் பெயரில் அந்த துண்டுப்பிரசுரங்கள் காணப்படுகின்றன. (து)

## புதிய பலா இனம் அறிமுகம்

விவசாயத் திணைக்களம் பல புதிய வர்க்கங்களை அண் மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இவை அனைத்தும் நாட்டின்வர்க்க வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப்பட்டனவாகும்.

இரண்டு புதிய வர்க்கப்பலாவை விவசாயத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றுக்கு றோஸ் கொஸ், மண்டூர் எனப் பெயரிடப்பட்டுள் ளன.

றோஸ் கொஸ் சராசரியாக வர்க்க வகையைச் சேர்ந்தாகும். றோஸ்கொஸ் சர்ராசரியாக 10-15 கிலோ கிராம் நிறை கொண்டதாக இருக்கும் இதனை பழமாகவும் இளங்காயை மரக்கறி உணவாகவும் உண்ணலாம். மண்டூர் வர்க்கம் 8-10 கிலோ கிராம் நிறையைக் கொண்டது. இதனைப் பழமாகவும் மரக்கறி உணவாகவும் உட்கொள்ளலாம்.

பிரேமில் எனப்படும் போஞ்சிவர்க்கமொன்றையும் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது இது ஒருசெடி போஞ்சிவர்க்கமாகும்.

இது விவாசயிகளிடையே சிறந்த வரவேற்பைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வர்க்கம் உயர் விளைச் சலைத்தருவதோடு சிறப்பான சுவையும் கொண்டுள்ளது . (து)

## பண மோசடி

(கொழும்பு)

முச்சக்கர வண்டிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் மோசடி செய்த சம்பவங்கள் பரவலாக நடைபெற்று வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஒரு குழு இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இது தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் மேலும் கூறியது

தங்களுடைய பெயருக்கு வந்த தந்தியால் ஒரு முச்சக்கரவண்டி கிடைத்திருப்பதாகவும் அதற்கான காப்புறுதிப்பணத்தை செலுத்திவிட்டு வண்டியைப் பெற்றுக்கொள்ள முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தந்தியில் ஒரு தொலை பேசி இலக்கம் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், அவ்விலக்கத் திற்கு அழைப்பை மேற்கொள்கையில் ஒரு வங்கியையும் கணக்கிலக்கத்தையும் குறிப்பிட்டு அதில்பணத்தை வைப்புச்செய்யுமாறு கூறப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் கூறினர்.

இதனை நம்பி பலர் பணத்தை வைப்புச்செய்து ஏமாற்றப்பட்டதாகவும் இது தொடர்பில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் பொலிஸ் தலைமையகம் பொதுமக்களைகேட்டுக்கொண்டுள்ளது. (கு-7)

## அரச குழுவுக்கான செயலமர்வில் ஹாவார்ட் பேராசிரியர்கள்

(கொழும்பு)

ஜெனீவா பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் அரசாங்கக் குழுவினருக்கான இரண்டாவது செயலமர்வு அரச தலைவர் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது.

பேச்சுவார்த்தைகளின் ஒழுங்குவிதிகள் எதிர்த்தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்துகையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றிய போதிய அறிவினை அரசாங்கக் குழுவிற்கு வழங்குவதே இந்த செயலமர்வின் நோக்கமாகும்.

ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் விசேட ஆய்வாளர்களான டொம் சிகாப் மற்றும் எலிசபெத் டெக்கியுலோட் இந்தசெயலமர்வில் உரையாற்றுகின்றனர். (து)

# சந்திரிகாவைக் கொலை செய்ய கொட்டகதெனிய சதி முயற்சி?

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக உள்ள கொட்டகதெனிய தன்னைக் கொல்ல புத்தபிக்குகளுக்கு உத்தரவிட்டமை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தகவல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சந்திரிகா குமாரதுங்க அனுப்பியுள்ள கடிதத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான தனது பாதுகாப்புத் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதைத் தமக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று சந்திரிகா அதில் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மேலும் தாம் ஓய்வுபெற்ற பின்னர் தமக்கு பாதுகாப்பு அளிப்பது தொடர்பாக முன்னைய அமைச்சரவை மேற்கொண்ட முடிவை தற்போதைய அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளமை குறித்தும் சந்திரிகா அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்று இரண்டரை மாதம் ஆகிவிட்ட நிலையிலும் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் எதுவித தகவலும் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பொறுப்பு வகித்த போது 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமயவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜாதிக ஹெல உறுமயவின் முன்னணித் தலைவராக இருந்தவர் தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனிய. ஹெல உறுமயவினர் நடத்திய ஆர்ப்பாட்டம் ஒன்றில், தலைப்பாகை அணிந்த பௌத்தபிக்கு ஒருவரிடம், சந்திரிகாவை படுகொலை செய்வது தொடர்பில் கூறியுள்ளார் என்றும் இதற்கான சாட்சியமாக பல மணிநேரம் ஓடக் கூடிய வீடியோ பதிவு தம்மிடமிருப்பதாகவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அப்படிப்பட்ட கொட்டகதெனிய அமைச்சுப் பொறுப்பின் ஆலோசகராக உள்ள நிலையில் மஹிந்தவின் அரசாங்கம் தமது பாதுகாப்புத் தொடர்பில் உத்திரவாதம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (த)

## சட்ட விரோத மண் அகழ்வு

(தனங்கிளப்பு)

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி தென்மராட்சி பிரதேசம் எங்கணும் இரவு, பகல் பேதமின்றி சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டு வருகின்றது.

கோயிலாக்கண்டி, நாவற்குழி, வரணி, கச்சாய் போன்ற இடங்களிலேயே இவ்வாறு சட்ட விரோத மணல் அகழ்வு பெருமளவு இடம்பெறுகின்றது.

இவ் மணல் உழவு இயந்திரம் மூலம் பெறப்பட்டு பின்னர் லொறிகள் மூலம் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படுகிறது என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாவற்குழி பாலத்தின் அருகே உள்ள நிலப்பரப்பில் பாரிய அளவு மணல் அகழப்பட்டுள்ளதால் அங்கு பாரிய குழிகள் காணப்படுகின்றது என்றும் இதனால் அண்மையில் உள்ள குடியிருப்புக்களில் கடல் நீர்புகும் நிலை ஏற்படலாமெனவும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இச் சட்ட விரோத மணல் அகழ்வினைத் தடுத்து நிறுத்துமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (து-37)

## பதிவுசெய்யக் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச சகல கடற்றொழிலாளர்கள் அனைவரும் தமது கடல் தொழில் உபகரணங்கள் அனைத்தையும் பதிவு செய்யுமாறு ஊர்காவற்றுறைப் பிரதேச கடல் நீரியல் வளப் பரிசோதகர் எம்.பி.அன்றூவ் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் சகல கடல் தொழில் சங்கங்களிலும் கடற்றொழில் பரிசோதகர் அலுவலகம் ஆகியவற்றிலும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-72)

## உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டி

# பிளவுறும் நிலையில் ஜே.வி.பி

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலின் தனித்துப் போட்டியிடுவது என்று ஜே.வி.பி முடிவெடுத்துள்ள நிலையில் அக்கட்சியில் பாரியளவு பிளவு ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடலாம் என்ற யோசனையை ஜே.வி.பியின் மத்திய குழுவின் சோமவன்ச அமரசிங்க, விமல் வீரவன்ச, நந்த குணதிலக்க மூவரும் முன்வைத்துள்ளனர்.

இம் மூவரும் முன்னதாக மஹிந்தவுடன் நடத்திய ஆலோசனையில் கூட்டாக தேர்தலைச் சந்திக்க ஒப்புக்கொண்டதாகவும், அது தொடர்பில் மத்திய குழுவின் ஒப்புதலைப் பெற்றுவருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தீர்மானத்தின் மீது பேசிய ஜே.வி.பி கட்சியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு நேர் எதிராக மஹிந்த அரசாங்கம் செயற்படுகிறது. அதனால் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட வேண்டுமானால் பெரும் எண்ணிக்கையிலான ஆசனங்களைக் கேட்டுப் பெற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து 26 உள்ளூராட்சி சபைகளில் ஜே.வி.பியின் சின்னத்தின் கீழ் சுதந்திரக் கட்சியினருடன் இணைந்தும் இதர பகுதிகளில் மூன்றில் ஒரு பங்கு ஜே.வி.பி வேட்பாளர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சின்னத்திலும் போட்டியிடுவது என்றும் இறுதியாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் ஜே.வி.பியின் இந்தத் தீர்மானத்தை மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்தமையால் தனித்துப் போட்டியிட அக்கட்சி முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில் மத்திய குழுவின் தீர்மானத்தை நிராகரித்து ஜே.வி.பியின் சில மூத்த தலைவர்கள் சுதந்திரக் கட்சியுடன் இணைய உள்ளதாகவும் இது தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் சுதந்திரக் கட்சியினர் தெரிவித்தனர்.

இதனிடையே சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தனது வலுவை உருவாக்கிக்கொள்ளும் வகையில் மேலும் சில மாதங்களுக்குத் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனையில் மஹிந்த இருப்பதாகவும் கூறப்படுகிறது. (த)

# மன்னார் மாவட்டத்தில் 7 கட்சிகள் போட்டியிடும்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கென 7 கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக மன்னார் மாவட்ட தேர்தல் திணைக் களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தத் தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் ஒரு நகர சபை உட்பட 4 பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளது.

மன்னார் நகர சபைக்கு 7 உறுப்பினர்களும், மன்னார் நானாட்டான் முசலி பிரதேச சபைகளுக்கு தலா 9 உறுப்பினர்களும், மாந்தே பிரதேச சபைக்கு 12 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக ஐக்கிய முன்னணி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய 7 கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை நியமிப்பதாக மன்னார் மாவட்ட தேர்தல் திணைக் களத்திற்கு அறிவித்துள்ளனர். (க-9)

# வட கிழக்கு மாகாணத்தில் 7000 ஆசிரியர்கள் நியமனம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கடந்த மூன்று வருட காலத்தில் சுமார் 7 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கல்வித்தரம் பற்றிய பிரச்சினை தலைதூக்கியுள்ளதாக வடக்கு- கிழக்கு மாகாண கல்வி மற்றும் பண்பாட்டாளர் அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் திருகோணமலையில் அமைக்கப்பட்ட 3மாடி கட்டடத் தொகுதி திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

11.6 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் 5 விசேட கல்வி செயற்பாட்டிற்குரிய அலுவலகமாக தொழிற்பட இருக்கின்றது.

1993ஆம் ஆண்டுக்கு முன்னர் பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டதாரிகளாக வெளியேறியோரும் பாடசாலைகளில் தொண்டர்களாக பணிபுரிந்தவர்களும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு சேவையாற்றி வருகின்றனர்.

இவர்களின் கற்பித்தல் ஆற்றல் கவனிக்கப்படவில்லை என்றும் இவை மேம்படுத்தப்படவேண்டியிருக்கின்றது என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கு தற்காப்பு ஆயுதப் பயிற்சி

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோருக்கு தற்காப்பு ஆயுதப் பயிற்சி வட்டக்கச்சி மகா வித்தியாலய மைதானத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை வட்டக்கச்சி மகா வித்தியாலய அதிபர் கனகசிங்கம் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியினை சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த கீதா ஏற்றினார்.

தொடர்ந்து பயிற்சி ஆரம்பமானது.

இப்பயிற்சியில் அதிபர், ஆசிரியர்கள் என 75 பேர் வரை கலந்துகொண்டனர். (க)

# பணியாளர்கள் விடுவிக்கப்படாதமை குறித்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கவலை

(கொழும்பு)

கடத்திச் செல்லப்பட்ட தமது ஊழியர்கள் இதுவரை விடுவிக்கப்படாதது குறித்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கவலை வெளியிட்டுள்ளது.

பொலிஸார் இந்த விடயம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் அது குறித்து தமக்கெந்தத் தகவல்களையும் தெரிவிக்கப்படுவதில்லை எனத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

கடத்தப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கைகளுக்கு போதுமான அளவு பங்களிப்பை தாம் வழங்குகின்றதாக குறிப்பிட்ட பேச்சாளர் இதுவிடயத்தில் அரசாங்கத்தையோ அல்லது பொலிஸாரையோ தமது அமைப்பு விமர்சிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரகசியப் பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் இது பற்றிக் கருத்து தெரிவிக்கையில், எமக்கு இதுவரை விசாரணையின் முன்னேற்றம் குறித்த விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

இது தொடர்பாக நாம் பொலிஸ் மா அதிபரையும் ஏனைய அரச அமைப்புக்களையும் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை.

கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் இந்த விசாரணைகள் குறித்து அதிருப்தியை வெளியிட்டுள்ளதுடன் துரிதமான பெறுபேறுகளை வெளியிடவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். (க-9)

# வீதி அபிவிருத்திக்கு முன்னுரிமை

(கொழும்பு)

வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு அரசாங்கம் பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

கடுகதி நெடுஞ்சாலைகள் அமைப்பதற்கும், வீதிகளை விஸ்தரிப்பதற்கும், காணிகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் பிரச்சினை காரணமாக வீதி அபிவிருத்திப் பணிகள் தாமதமடைகின்றன.

இதற்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு இழப்பீடு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என நெடுஞ்சாலைகள் அமைப்பு அமைச்சின் செயலாளர் எஸ். அமரசேகர தெரிவித்தார். (து-7)

# சிறுவர்களின் போசாக்கு தொடர்பில் அரசு அக்கறை

சிறுவர்களின் உடல் நலனில் அக்கறை கொண்டுள்ள அரசாங்கம் - சிறுவர்களுக்கான போசாக்கு உணவுகள் குறித்து வெளியாகும் விளம்பரங்கள் தொடர்பாகவும் கூடுதல் கவனம் செலுத்தவிருப்பதாக வர்த்தகப் பாவனையாளர் அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.கே.ரத்நாயக்கா தெரிவித்தார்.

சிறுவர்களுக்கான ஊட்டச்சத்துக் குறித்து இந்த வருடம் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தவிருக்கிறது.

எனவே இது சம்பந்தமான விளம்பரங்களை உன்னிப்பாக அவதானிப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## வேண்டாத நட்பு

ஒரு மலையடிவாரத்தில் ஆமையும், நரியும் நெருங்கிப் பழகி வந்தன. நரி இரை தேடிக்கொண்டு



வந்து ஆமைக்குக் கொடுத்து, தானும் சாப்பிடுமாம். அவைகள் இருந்த இடத்திற்கு அருகில் ஒருவன் வெள்ளிக்காய் பயிரிட்டிருந்தான்.

நன்றாகக் காய் விளைந்திருந்தது.

அதனைப் பார்த்த நரிக்கு வெள்ளிக்காய் தின்னும் ஆசை வந்துவிட்டது. நரி, ஆமையை அழைத்துக் கொண்டு அந்த தோட்டத்திற்குச் சென்றது. வேலிக்கு வெளியே ஆமையைக் காவல் வைத்து யாரேனும் வந்தால் உடனே எச்சரிக்கை செய்யும்படி கூறிவிட்டுவேலியைத் தாண்டி தோட்டத்திற்குள் போனது.

உள்ளே சென்ற நரி வேண்டிய மட்டும் நல்ல நல்ல வெள்ளரிப் பிஞ்சுகளை சாப்பிட்டது. அந்த வேளையில் தோட்டக்காரன் வந்து விட்டான்.

ஆமை தன் தலையை ஓட்டுக்குள் மறைத்து வைத்துக் கொண்டது. தோட்டக்காரன் கண்ணில் நரி தென்பட்டது. அதனைக் கம்பால் அடி அடி என்று அடித்தான். வலி தாங்க முடியாமல் நரி அலறிக்கொண்டு வெளியே ஓடியது.

ஆமையைப் பார்த்ததும், "தோட்டக்காரன் வருவதை நீ ஏன் என்னிடம் கூறவில்லை? என்று கோபமாகக் கத்தியது நரி. அதற்கு ஆமை,

"நான் என்ன கண்டேன். உன்னை மாதிரி எங்கே, என்ன கிடைக்கும் என்று பேயாக அலையாமல் இருப்பதை சாப்பிட்டு தண்ணீருக்குள் நிம்மதியாகக் காலம் கழித்து வந்தேன். இப்போது உன்னால் தொல்லை. போதும் உனது நட்பு என்று கூறிவிட்டு குளத்தை நோக்கிச் சென்றது.

கூடா நட்பு துன்பமே தரும்.

## பர்டினாண்ட் மஜல்லன்



(Ferdinand Magellan, 1480–1521): கடல்வழியாக முதல் முதலில் உலகத்தைச் சுற்றிவர முற்பட்டவர் பர்டினாண்ட் மஜல்லன். இவர் போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற மாலுமி.

இளம் வயதில் இவர் அரண்மனையில் பணிப் பையனாக இருந்தார். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த வரலாற்றை அங்கு கேட்டறிந்தார். வாஸ்க்கோ-ட-காமா ஆபிரிக்காவைச் சுற்றி நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவை அடைந்த செய்தியும் இவரைக் கவர்ந்தது. தாமும் நாடாய்வாளராகக் கடல் பயணம் செய்யவேண்டும் என்ற விருப்பம் இவருக்கு உண்டாயிற்று.

மஜல்லன் 25ஆம் வயதில் இராணுவத்தில் சேர்ந்தார். சிறந்த இராணுவ அதிகாரியாகவும் புகழ்பெற்றார். போர்ச்சுகலிலிருந்து கடல்வழியாக மேற்கு நோக்கிப் பயணம் செய்து கிழக்கிந்தியத் தீவுகளை அடைய இவர் திட்டமிட்டார். இதைப் போர்ச்சுகல் மன்னர் ஆதரிக்கவில்லை. எனினும் ஸ்பெயின் மன்னர் மஜல்லனுக்கு ஊக்கமளித்து 5 கப்பல்களையும் 270 ஆட்களையும் கொடுத்து உதவினார்.

ஸ்பெயினிலிருந்து மஜல்லன் 1519 செப்டெம்பர் 20ஆம் நாள் புறப்பட்டுத் தென்மேற்காகக் கடலில் பயணம் செய்தார். பல நாட்கள் சென்றபின் இக்கப்பல்கள் தென் அமெரிக்காவின் தென் கோடியிலுள்ள ஜலசந்தியை அடைந்தன. இது இவரது நினைவாக "மஜல்லன் ஜலசந்தி" என்று இப்போது அழைக்கப்படுகிறது. அங்கு கடல் கொந்தளிப்பாக இருந்தது. இதைக் கடந்து மஜல்லன் மேற்கிலுள்ள சமுத்திரத்தை அடைந்தார். அங்கு கடல் அமைதியாக இருந்தது. அதற்கு பசிபிக் சமுத்திரம் என்ற பெயரை இவர் சூட்டினார். "பசிபிக்" என்ற சொல்லுக்கு "அமைதி" என்று பொருள்.


பிறகு சுமார் ஐந்து மாதங்கள் பல இன்னல்களுக்கு இடையே பயணம் செய்து இவர் பிலிப்பீன் தீவுகளை அடைந்தார். இங்கு மஜல்லன் சில நாட்கள் தங்கினார்.

இவருடைய ஆட்களுக்கும் தீவு மக்களுக்குமிடையே ஏற்பட்ட போரில் மஜல்லனும் இவருடைய ஆட்களில் பலரும் இறந்தனர். பின்னர் எஞ்சிய சிலரே ஒரு கப்பலில் தொடர்ந்து பயணம் செய்து 1522 ஆம் ஆண்டு செப்டெம்பரில் ஸ்பெயினை அடைந்தார்.

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்தபட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



### உங்களுக்குத் தெரியுமா?

* ஆங்கில எழுத்துக்கள் 26என்பது நமக்குத் தெரியும். அதேபோல் சிங்கள மொழியில் 54 எழுத்துக்களும், ஹவாய்ஜியன் மொழியில் 12 எழுத்துக்கள் மட்டுமே உள்ளன.
* ஜப்பான் நாட்டு மயில்கள் சிவப்பு நிறத்தில் முட்டையிடுகின்றன.
* ஒட்டகத்துக்கு மூன்று வயிறுகள் உண்டு.
* உலகிலேயே மிகப்பெரிய குரங்கு கொரில்லா. இதன் எடை 420 பவுண்ட் வரை இருக்கும்.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

விடைகள்
கண்டுபிடியுங்கள்
1.பிஸ்கட் 2.நாய்
3.பாடசாலை பை 4.டை
5.கைக் கடிகாரம்
6.காலணிகள் 7. சொக்ஸ்

## முக்கிய விமான நிலையங்கள்

1. இந்தியா: இந்திராகாந்தி விமான நிலையம் (டில்லி)
சாந்தாகுரூஸ் / சஹர் (மும்பை)
டம்டம் (கொல்கத்தா)



2. ஆஸ்திரேலியா: சிட்னி
3. ஸ்வீடன்: ஸ்டாக்ஹோம்
4. ஸ்விட்சர்லாந்து: ஜூரிச்
5. அமெரிக்கா: நியூயோர்க்
6. மேற்கு ஜெர்மனி: மூனிச், ப்ராங்பர்ட்
7. பிரான்ஸ்: பாரிஸ்
9. பிரிட்டன்: லண்டன்
10. சிங்கப்பூர்: சிங்கப்பூர்
11. அர்ஜன்டைனா: போனஸ் அயர்ஸ்
12. பாகிஸ்தான்: கராச்சி
13. ரஷ்யா: மாஸ்கோ



14. ஜப்பான்: டோக்கியோ
15. ஹாங்காங்: ஹாங்காங்
16. இத்தாலி: ரோம்
17. ஈரான்: டெஹ்ரான்
18. பிரேசில்: ரியோடி ஜெனிரோ
19. எகிப்து: கெய்ரோ
20. சீனா: ஷாங்காய்

உலகிலேயே மிகப் பிரம்மாண்டமான விமான நிலையம் எது தெரியுமா? அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாகாணத்தில் இருக்கும் டல்லாஸ் என்ற இடத்தில் உள்ளதுதான்.

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டிய

**சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 நவம்பர் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

11 (சென்றவாரத் தொடர்ச்சி...)

4.அத்தகைய குற்றங்கள், அரசதரப்பினரிடையே நாடு கடத்தும் நோக்கங்களுக்காக, அவை இழைக்கப்பட்ட நாட்டில் மட்டுமல்லாது, 4 ஆம் உறுப்புரையின் படி தமது நியாயாதிக்கத்தை ஏற்படுத்துமாறு கோரப்பட்ட நாடுகளிலும் இழைக்கப்பட்டதாகக் கருத வேண்டும்.

5. 3ஆம் உறுப்புரையின் முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் சம்பந்தமாக நாடு கடத்துமாறு கோரப்பட்ட போது, தன் பிரஜை என்ற காரணத்தைக் காட்டி நாடு கடத்த மறுக்கும் அரச தரப்பினர், சம்பந்தப்பட்ட விடயத்தில் வழக்குத் தொடுப்பதற்காகத் தகுதி வாய்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**உறுப்புரை 06**

1.அரசதரப்பினர், 3ஆம் உறுப்புரையின் முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் சம்பந்தமான விசாரணைகள், குற்றவியல் சட்ட நடவடிக்கைகள், நாடு கடத்தும் நவடிக்கைகள் ஆகியவை தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான தம்மிடமுள்ள சாட்சியங்களைக் கொடுத்து உதவுவது



உட்பட, அதிகபட்ச உதவியை ஒருவருக்கொருவர் அளித்தல் வேண்டும்.

2.அரசரதப்பினர், இந்த உறுப்புரையின் முதலாம் பந்தியின் படியான தமது கடப்பாட்டை, அவற்றுக்கிடையேயுள்ள உடன்படிக்கைகளுக்கும் பரஸ்பர சட்ட உதவி சம்பந்தமான வேறு ஒழுங்குகளுக்கமைய செயற்படுத்தல் வேண்டும். அத்தகைய உடன்படிக்கைகளோ ஒழுங்குகளோ இல்லாதவிடத்துத் தமது உள்ளூர் சட்டத்தின்படி ஒன்றுக்கொன்று உதவவேண்டும்.

**உறுப்புரை 07**

அரசதரப்பினர், தமது நாட்டின் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்,

(அ)கைப்பற்றுதல், பறிமுதல் செய்தல் ஆகியவற்றுக்குப், பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்தல்வேண்டும்.

(1)இந்தப் பூர்வாங்க ஆவணத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட குற்றங்களைச் செய்ய அல்லது செய்ய உதவும் பொருட்கள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்.

(11)அக் குற்றங்கள் மூலம் பெறப்பட்ட வருமானங்கள்,

(ஆ) உப பந்தி (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களையும் வருமானத்தையும் கைப்பற்றிப் பறிமுதல் செய்யுமாறு வேறு அரசதரப்பின் கோரிக்கையைச் செயற்படுத்தல்,

(இ)அக் குற்றங்களைப் புரிய உபயோகிக்கப்பட்ட கட்டடங்களைத், தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ, மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**உறுப்புரை 08**

1.இந்தப் பூர்வாங்க ஆவணத்தால் தடைசெய்யப்பட்டுள்ள செயற்பாடுகளால் பாதிப்புற்ற பிள்ளைகளின் உரிமைகளையும் நன்மைகளையும் குற்றவியல் நீதி

## சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

நடைமுறையின் எல்லாக் கட்டங்களிலும் பாதுகாப்பதற்கு, குறிப்பாகக் கீழுள்ள வழிகளில், நடவடிக்கை அரசதரப்பினர் எடுத்தல் வேண்டும்.

(அ)பாதிப்புற்ற பிள்ளைகளின் பலவீனத்தைக் கவனத்திற்கெடுத்து சாட்சியமளிப்பது உட்பட அவர்களின் விஷேட தேவைகளை ஏற்றுப் பொருத்தமான நடைமுறைகளைக் கையாள வேண்டும்.

(ஆ) பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அவர்களின் உரிமைகள், வழக்கு விசாரணைகளில் அவர்களின் பங்கு, அதன் முன்னேற்றம் வழக்கு ஆகியவற்றைப் பற்றி அறிவிப்பதோடு, அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை, விரைவாக விசாரித்து முடித்தல் வேண்டும்.

(இ)வழக்கு விசாரணைகளில், அவர்களது தனிப்பட்ட நலன்கள் பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், பாதிக்கப்பட்ட பிள்ளைகளது கருத்துகள், அபிப்பிராயம், தேவைகள் அக்கறைகள் ஆகியன காணப்பட்டுக் கவனத்திற்கொள்ளப்படல்

(ஈ)நீதி விசாரணையின் போது பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்குப் பொருத்தமான உதவிச் சேவைகள் வழங்கப்படவேண்டும்.

(உ)பாதிப்புற்ற பிள்ளைகளின் தனிமை, அந்தரங்கம் அடையாளம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்குத் தகுந்த வழிகளில் நடவடிக்கை எடுப்தோடு பாதிப்புற்ற பிள்ளைகளை அடையாளம் காண உதவக்கூடிய தேவையற்ற தகவல்கள் பரப்பப்படுவதைத் தடுப்பதற்குத் தேசிய சட்டத்துக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ) பாதிப்புற்ற பிள்ளைகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களின் சாட்சிகளுக்கும் பயமுறுத்தலிலிருந்தும் பழிவாங்கலிலிருந்தும் தேவைப்படின் பாதுகாப்பு வழங்குதல் வேண்டும்.

(எ)வழக்குகளை முடிவுக்குக்கொண்டு வருவதில் தேவையற்ற காலதாமதம் ஏற்படுத்துவதையும் பாதிப்புற்ற பிள்ளைக்கு நஷ்டஈடு வழங்கும் உத்தரவையோ தீர்ப்பையோ செயற்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதையும் தவிர்த்தல் வேண்டும்.



2.பாதிக்கப்பட்டவரின் உண்மை வயது பற்றி எழக்கூடிய சந்தேகம் காரணமாக, குற்றவியல் விசாரணைகள் தடைப்படுவதை அரசதரப்பினர் அனுமதிக்கக்கூடாது. இதே போன்று, பிள்ளையின் உண்மையான வயதை அறிய மேற்கொள்ளும் விசாரணைகளையும் தடுக்க இடமளிக்கக் கூடாது.

3.இப் பூர்வாங்க ஆவணத்தில் விவரிக்கப்பட்ட குற்றங்கள் சம்பந்தமாக, பிள்ளைகளுக்கான குற்றவியல் நீதியமைப்பு, பிள்ளைகளின் அதியுயர் நலனைப் பிரதானமாகக் கவனத்தில் கொள்வதை அரசதரப்பினர், உறுதி செய்யவேண்டும்.

4.இப் பூர்வாங்க ஆவணத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ள குற்றங்களுக்காளான பிள்ளைகளுடன் பணி புரியும் ஆட்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்க வேண்டும். குறிப்பாக சட், உளவியல் துறைகளில் தேவையான பயிற்சியளிப்பதற்கு நடவடிக்கை அரசதரப்பினர் எடுத்தல் வேண்டும்.

5.அத்தகைய குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும், அத்தகைய குற்றச் செயல்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கும், அத்தகைய குற்றச் செயல்களால் பாதிப்புற்ற பிள்ளைகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்குமெனப் பணிபுரியும் ஆட்களினதும் நிறுவனங்களினதும் பாதுகாப்பையும் நேர்மையையும் பேணுவதற்கு, தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அரச்தரப்பினர், உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6.இந்த உறுப்புரையிலுள்ள எதுவும் குற்றம் சாட்டப்பட்டவரின் நியாயமான, பாரபட்சமற்ற விசாரணைகளுக்கான உரிமைகளுக்குப் பாதிப்பு விளைவிப்பதாகக் கொள்ளலாகாது.

**உறுப்புரை 09**

1.இப்பூர்வாங்க ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான சட்டங்களையும் நிர்வாக நடவடிக்கைகளையும் சமூகக் கொள்கைகளையும் செயல் திட்டங்களையும் உருவாக்கி அல்லது பலப்படுத்திச் செயற்படுத்துவதுடன் அவற்றை மக்களிடையே பரப்பவும் அரதரப்பினர், நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தகைய செயல்களால் அதிகம் பாதிக்கப்படும் பலவீனமான பிள்ளைகளைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

2. இப் பூர்வாங்க ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் செயல்களின் கேடான விளைவுகளையும் அவற்றைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் கல்வி, பயிற்சி உட்பட பொருத்தமான வழிகளில் பிள்ளைகள் உட்பட பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்கு அரசதரப்பினர், நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இந்த உறுப்புரையின் கீழ் தம் கடப்பாட்டை நிறைவேற்றுகையில் சர்வதேச மட்டம் உட்பட, அத்தகைய தகவல், கல்வி, பயிற்சித் திட்டங்களில் சமூகத்தினர் பங்குபற்றுவதைக் குறிப்பாகப் பிள்ளைகளினதும் பாதிப்புற்ற பிள்ளைகளும் பங்குபற்றுவதை ஊக்குவிக்கவேண்டும்.

3. அத்தகைய குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோர் முழுமையாகச் சமூகத்தில் ஒருங்கிணைக்கப்படவும், உடல், உள ரீதியில் முழுமையாகக் குணமடையவும் தேவைப்படும் சகல உதவிகளையும் செய்வதற்குச் சாத்தியமான நடவடிக்கைகள் யாவற்றையும் அரசதரப்பினர் எடுத்தல் வேண்டும்.

4.இப் பூர்வாங்க ஆவணத்தில் விவரிக்கப்பட்ட குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கு, சட்டப்படி பொறுப்பானோரிடமிருந்து நஷ்ட ஈட்டைப் பெறுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வழிவகைகளை, அரசதரப்பினர், எத்தகைய பாரபட்சமுமின்றிசெய்து கொடுக்க வேண்டும்.

5. இப் பூர்வாங்க ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள குற்றச் செயல்கள் சம்பந்தமான வியடங்களைத் தயாரிப்பதையும் விநியோகிப்பதையும் விளம்பரப் படுத்துவதையும் உரிய வகையில் தடை செய்வதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அரசதரப்பினர் எடுத்தல் வேண்டும்.

(தொடரும்...)

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகுமதியான் பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

**சிறுவர் பாதுகாப்பு இலங்கை**
**யாழ்ப்பாணம்**

# குறிகட்டுவான் இறங்கு துறையை புனரமைக்க 5 கோடிரூபா ஒதுக்கீடு

(புங்குடுதீவு)

சேதமடைந்திருக்கும் புங்குடுதீவு – குறிகட்டுவான் இறங்குதுறையையும், இறங்குதுறைக்கான எட்டு கிலோமீற்றர் நெடுஞ்சாலையையும் புனரமைப்பதற்கு 5 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எஸ்.சுதாகர் தெரிவித்தார்.

இவ் வேலைத் திட்டத்துக்கான திட்டவரைபுகள் தயாரிக்கப்பட்டு, வேலைகளை நிறைவேற்ற தனியார் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

யுத்த சூழ்நிலைகளால் குறிகட்டுவான் இறங்குதுறைக்குச் செல்லும் நெடுஞ்சாலையும், இறங்குதுறையும் மோசமாக சேதத்துக்குள்ளாகி இருக்கின்றன.

இந்த இறங்குதுறை மூலமாக பெரும் எண்ணிக்கையான தென்பகுதி மக்கள் நயினாதீவு நாக விகாரைக்கு வழிபாட்டுக்கு சென்று வருவதாலும், நெடுந்தீவு, நயினாதீவு மக்கள் தமது இருப்பிடங்களுக்கு படகுகள் மூலம் செல்வதாலும் இறங்குதுறையும், வீதியும் அவசரமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# புகையிலை, வாழை, வெங்காய செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி தீவுப் பகுதி ஆகிய பிரதேச விவசாயிகள் புகையிலை, வாழை, சின்ன வெங்காய செய்கையில் தற்போது அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த உற்பத்திப் பொருட்களின் விலை உயர்வாக இருப்பதே இதற்குக் காரணமாகும். யாழ்.குடாநாட்டில் இருந்து இந்த உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் தற்போது தென்னிலங்கைக்கு அனுப்பப்படுகின்றன.

தீவுப்பகுதிகளில் பருவ மழையைத் தொடர்ந்து வரும் நான்கு மாதங்களே பயிர்ச்செய்கைக்கேற்ற காலமாகும்.

தற்போது வலிகாமம் பகுதி விவசாயிகள் பயிர்களுக்கு தூறல் நீர்ப்பாசனத்தையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## சுற்று நிருபம் குறித்த விசேட கலந்துரையாடல்

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான சர்ச்சைக்குரிய சுற்று நிருபம் பற்றிய விசேட கலந்துரையாடல் இன்று நடைபெறும்.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான நெருக்கடி நிலையைத் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகள் பற்றி பேச்சுவார்த்தையின்போது ஆராயப்படும்.

இந்தக் கலந்துரையாடலின்போது எடுக்கப்படும் தீர்மானம் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிவிக்கப்படும்

இந்தக் கூட்டத்தில் திறைசேரியின் செயலாளர் பீ.பி.ஜெயசுந்தர, பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் உயர்தர அதிகாரிகள் பலரும் கலந்துகொள்வார்கள். (க-7)

## இரத்த தானம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தூய பியோ விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் குருநகர் சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நடமாடும் இரத்த வங்கி சேவையின் வைத்தியக் கலாநிதி சிவசங்கர் தலைமையில் கடந்த 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பியோ விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் மற்றும் குருநகர் வாழ் மக்கள் என 75க்கும் மேற்பட்ட மக்கள் இரத்த தானம் வழங்கினர். (க-4)

# இலவச சட்ட உதவிகள்

(சாவகச்சேரி)

வரணி மட்டுவில் ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்கு இலவச சட்ட உதவிகள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கரித்தாஸ் – கியூடெக் நிறுவனத்தின் மனித உரிமைகள் பிரிவும், நோர்வே அகதிகள் பேரவையும் இணைந்து இந்தச் சேவையை வழங்க முன்வந்துள்ளன.

அதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை மட்டுவில் கத்தோலிக்க தேவாலாயத்திலும், 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரணியிலும் நடமாடும் இலவச சட்ட உதவி சேவைகள் வழங்கப்படவுள்ளது. (க-108)

# 77 இலட்சம் ரூபா செலவில் 10 வீடுகள் பரு. மூர்க்கம் கிராமத்தில் அமைக்க ஏற்பாடு

(பருத்தித்துறை)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை, ஜேர்மன் டயகோனி நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பருத்தித்துறை கிழக்கு மூர்க்கம் கிராமத்தில் 10 வீடுகளைச் சுமார் 77 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணித்து வருகின்றது.

இவ்வீடுகளை அமைப்பதற்கென 10 பரப்புக் காணியினை இலங்கை மெதடிஸ்த திருச்சபை 70 இலட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்துள்ளது. இக்காணியில் 10 வீடுகள் 77 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வீடுகளுக்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் இலங்கை மெதடிஸ்த திருச்சபை கட்டைவேலி நெல்லியடி சேகர முகாமைக்குரு அருட் திரு. டி அழகராசா அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

ஜேர்மன் டயகோனி நிறுவன இலங்கை இணைப்பாளர் டானியல் தம்பிராஜா, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு வீடுகளுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

பருத்தித்துறை போதகர் அருட்திரு. ஜீ.ஏ.சதீஸ் அடிகளாரும் இவ் அடிக்கல் நாட்டும் விழாவிலே கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார். கிராம பிரமுகர்கள், பொதுமக்களும் இவ் விழாவிலே கலந்துகொண்டனர். (து-52)

# உள்ளூராட்சி தேர்தல்கள் தொகுதி முறையில்?

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பழைய தொகுதி முறையில் நடத்துவதற்கு அரசாங்கத்திற்குள் இணக்கம் ஏற்பட்டிப்பதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளில் அதிகமானவர்களைத் தொகுதி முறையில் தெரிவு செய்யவும் சில பிரதிநிதிகளை அந்தந்த அரசியல் கட்சிகளுக்கோ சுயாதீன குழுக்களுக்கோ கிடைக்கும் வாக்குகளின் விகிதாசார முறைக்கமைய தெரிவு செய்து கொள்ளக்கூடிய வகையிலும் தேர்தல் சட்டத்தில் திருத்தத்தைக்கொண்டு வர அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

இது தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு உயர்மட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பல்வேறு கட்சிகளுடன் அக்குழுவினர் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாட்டை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுவரை பேச்சுவார்த்தைகளை நடத்தாத கட்சிகளுடனும் வெகுவிரைவில் பேச்சுவார்த்தைகளை நடத்தி மார்ச் மாத முடிவிற்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தைத் திருத்தத்துக்கான புதிய சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. (க)

# உணவகங்களில் சுத்தம் பேணுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக் குட்பட்ட பிரதேசத்தில் இயங்கிவரும் உணவகங்களில் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் பேண உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சபையின் செயலாளர் கே.என்.பாலச்சந்திரன் அனைத்து உணவகங்களின் உரிமையாளர்களையும் கோரியுள்ளார்.

இப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொடிகாமம், கைதடி, நாவற்குழி போன்ற இடங்களில் இயங்கிவரும் உணவகங்களில் சுத்தமும், சுகாதாரமும் முறைப்படி பேணப்படுவதில்லை எனப் பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இதேசமயம் உணவகங்களில் உணவு பரிமாறுபவர்களாகவும், ஊழியர்களாகவும் பணியாற்றுபவர்கள் யாவரும் சுகதேகிகளாக இருப்பதுடன் நோய்காவிகளாக இருக்கக்கூடாது எனவும் சபையின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த-16)

## விபத்தில் குடும்பஸ்தர் பலி

(துன்னாலை)

துன்னாலை தாமரைக்குள வீதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் குடும்பஸ்தர் மரணமானார்.

இதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையாரான நடராசா குமரேசமூர்த்தி (வயது 52) என்பவரே மரணமானவராவர். இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது. (க-101)

# தேசிய முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக அங்கீகரிப்பு

(கொழும்பு)

அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸைத் தேர்தல் ஆணையாளர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக அறிவித்துள்ளார்.

தமது கட்சிக்கு குதிரைச் சின்னம் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.பி.அங்குணாவல தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் சிங்கள ஊடகவியலாளர்கள் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் ஊடகவியலாளர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் கருத்து தெரிவித்த சிங்கள ஊடகவியலாளர்கள் கடந்த மாதம் ஹட்டன் நகரில் நடைபெற்ற சுற்றிவளைப்புக்கள், கைதுகள் குறித்து உடனுக்குடன் விடுதலைப்புலிகளின் இணையத்தளங்களில் வெளியானது தொடர்பில் பொலிஸாருக்குத் தாம் அறிவித்ததாக தெரிவித்தனர்.

சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போது கைதுசெய்யப்படுவோரை விடுதலை செய்யுமாறு அரசியல்வாதிகள் விடுக்கும் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க வேண்டாம் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

அதேபோல் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பத்தனை ஸ்ரீ பாத கல்லூரி பயிலுனர் ஆசிரியர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸார் அவர்களைத் தாக்கியதை வரவேற்பதாகவும் அவ்வாறு செயற்பட்டிருக்காவிட்டால் மக்கள் பொலிஸாருக்கு எதிராகச் செயற்பாட்டிருப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

சமாதான குழுக்களின் உறுப்பினர்களுக்கு பொலிஸார் அதிகாரமிக்க அடையாள அட்டைகளை வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள அந்த ஊடகவியலாளர்கள், அதனைப் பயன்படுத்தி பயங்கரவாத சந்தேக நபர்களை பிடித்த பொலிஸரிடம் ஒப்படைக்க முடியும் எனவும் கூறியுள்ளனர்.

இதேவேளை பெரும்பான்மை இன ஊடகவியலார்களின் இந்தக் கருத்துக்கள் ஊடக தர்மத்திற்கு எதிரானது என மலையக தமிழ் ஊடகவியலார்கள் தெரிவித்துள்ளனர். (க)

# புதிய பிரதேச செயலகம் கொடிகாமத்தில் அமையும்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியிலுள்ள கொடிகாமம் பிரதேசத்தில் புதிய பிரதேச செயலகம் ஒன்று மிக விரைவில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளில் யாழ்.மாவட்ட அரச செயலகம் ஈடுபட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் மொத்தமாக உள்ள 60 கிராமசேவையாளர் பிரிவுகளில் தென்மராட்சி கிழக்கை மையப்படுத்தும் வகையில் 28 கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக புதிய பிரதேச செயலகம் அமையவுள்ளது.

இது விடயம் தொடர்பான இறுதி ஆலோசனைக் கூட்டம் ஒன்று தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

அத்துடன் இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு தென்மராட்சி பிரதேசத்தில் இருக்கின்ற முக்கிய பிரமுகர்களும் பங்குகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (து-16)

## வருடாந்த பொதுக்கூட்டம்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 27ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வணிகர் மன்றத்தின் தலைவர் வீ.வீ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்பொதுக்கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராகப் பங்குகொள்ளவுள்ளார்.

இந்த வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் போது அமரர் நமசிவாயம் நினைவுப் புலமைப்பரிசில்களும் அமரர் கு.தவராஜசிங்கம் நினைவாக விதவைகள் ஊக்குவிப்பு நிதியும் வழங்கப்படும் என மன்றத் தலைவர் வீ.வீ.மகாலிங்கம் தெரிவித்தார். (து-16)

# இடம்பெயர்ந்து வாழும் மக்களின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களின் தரத்தை உயர்த்துவதற்கு யாழ்.மாவட்ட திட்டமிடல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதல்கட்டமாக முகாம்களுக்கு வெளியே உறவினர்கள், நண்பர்களுடன் வாழும் குடும்பங்களுக்கு அரை, நிரந்தரமான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு வசதியாக காணி வசதியுள்ள குடும்பங்களின் விபரங்கள் திட்டமிடல் பிரிவினால் திரட்டப்படுகிறது.

இவ் இடம்பெயர்ந்தோரின் நலனுக்காக பொது நோக்கு மண்டபங்களை அமைக்க யூ.என்.எச்.சி.ஆர் முன்வந்துள்ளதாக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-108)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

48 மீள்பார்வை



மறுநாள் காலை எழுந்து, உலகப் பிரசித்தி பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சியைக் சுற்றிப் பார்த்தேன்.

அதன் பின் எனக்குச் சிறப்பான விருந்தெல்லாம் கொடுத்தார்கள் நான் புறப்படும்போது, நகரத்தின் நுழைவாயில் அருகில் வந்து, எனக்கு மீண்டும் ஒரு பூச்செண்டைக் கொடுத்து, அந்தத் தங்கச்சாவியை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டார்கள். ஞாபகார்த்தமாக அதே போல் ஒரு சின்னத் தங்கச்சாவியை என் கையில் கொடுத்து, 'தாங்கள் மீண்டும் வரவேண்டும் மீண்டும் ஒரு நாள் இந்த ஊருக்கு மேயராக இருக்க வேண்டும்' என்று கூறி வாழ்த்தி வழியனுப்பினார்கள்.

இந்திய மக்களில் அமெரிக்க நாட்டிலுள்ள, நயாகராசிட்டி மேயராக இருந்தது. இரண்டே இரண்டு இந்தியர்கள்தான் ஒன்று என்னை 'ஹலோ ஆக்டர்' என்று செல்லமாக அழைத்த, பண்டித ஜவகர்லால் நேருஜி மற்றொன்று ஆக்டர் சிவாஜிகணேசன் இது நம் நாட்டுக்குப் பெருமையல்லவா?



'பலே பாண்டியா' படத்தில் எம்.ஆர் ராதாவுடன்...

## நான் கண்ட நாடுகள்

டி.எஸ்.என்: நீங்கள் அமெரிக்காவில் எத்தனை மாதம் தங்கினீர்கள்? எப்போது தாயகம் திரும்பினீர்கள்?

சிவாஜி:-அமெரிக்காவில் சரியாக இரண்டு மாதங்கள் தான் தங்கியிருந்தேன். இரண்டு மாதங்களுக்குள் வீட்டில் என் மனைவி கமலா மிகவும் சங்கடப்பட்டு விட்டாள். சீக்கிரம் வந்து விடுங்கள் என்று தினமும் போன் செய்து கொண்டே இருப்பாள். நானும் குறுகிய காலத்தில் அமெரிக்காவிலிருந்து கிளம்பினேன் வரும்போது மலேசியா வழியாக வந்தேன். அங்கே நமது தமிழர்கள், மலேசிய பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான் போன்றவர்கள் எனக்கு மிகப்பெரிய வரவேற்புக் கொடுத்தார்கள்.

அதன்பின் சிங்கப்பூர் வந்தேன் அங்கேயும் மிகுந்த அன்போடு வரவேற்று உபசரித்தார்கள் . நம் தமிழர்கள் இருக்கும் இடங்களிலெல்லாம், தமிழனான எனக்கு மரியாதை செய்யத் தவறியதே இல்லை சென்ற இடமெல்லாம் தமிழர்களும் , அந்நாட்டுக்காரர்களும் தங்கள் அன்பினால் என்னை மகிழச் செய்தார்கள்.

இதன் பின்பு பலதடவை நான் சிங்கப்பூர் , மலேசியாவுக்கு சென்று வந்திருக்கிறேன் .அங்கு என்னிடம் பாசமும் , நேசமும் கொண்ட பல குடும்பங்கள் இருக்கின்றன . ஏராளமான ரசிகர்மன்றப் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

டி.எஸ்.என்: இப்போது நீங்கள் குறிப்பிட்ட நாடுகள் தவிர, வேறு நாடுகளுக்கும் சென்றிருக்கிறீர்களா?

சிவாஜி: ஆம்சிலோன் நமது அண்டை நாடு இப்போது ஸ்ரீலங்கா என்று குறிப்பிடுகிறோம். அங்குள்ள தமிழர்களுக்கும் , அந்நாட்டு மக்களுக்கும் என்னிடம் தனி அன்பு உண்டு. விசேஷ அழைப்புகளை ஏற்றும், படப்பிடிப்புக்களுக்காகவும் பலமுறை சென்றிருக்கிறேன்.

1978ல் சிலோன் நாட்டின் கொலாபரேஷனில் 'பைலட் பிரேம்நாத்' என்ற படம் எடுத்தோம். அதில் ஸ்ரீலங்காவைச் சேர்ந்த மாலினி பொன்சேகா என்ற மிகப்பெரிய நடிகை என்னுடன் நடித்தார்.

எனக்கு விருதுகள் கிடைத்த போதெல்லாம் அந்த நாட்டிற்கு அழைத்து, என்னைக் கௌரவித்தார்கள். இப்பொழுதும் விழாக்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நமது ரசிகர் மன்றத்துப் பிள்ளைகள் நிறைய பேர் அங்கு இருக்கிறார்கள்

U.A.E என்பார்களே அரபு நாடுகள் அவற்றில் துபாய், குவைத் போன்ற நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். நிறையத் தமிழர்களும், அயல் நாட்டு ஷேக் என்று சொல்வார்களே அவர்களும் எனக்கு நெருங்கிய நண்பர்கள். அவர்களும் எனக்கு விருதுகள் கிடைத்தபோது, அழைத்துப் பாராட்டியிருக்கிறார்கள்.

இவை தவிர ஸ்விட்சர்லாந்து, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குப் படப்பிடிப்புகளுக்காக, ஓரிரு முறை சென்றிருக்கிறேன்.

இந்தக் காலம் மாதிரி அப்போது கிடையாது. இப்போது ஒவ்வொரு படத்திலும் முக்கியமான காட்சிகளையும் , லவ் டூயட் காட்சி களையும் வெளிநாட்டில்தான் எடுக்கிறார்கள். அப்படி எடுத்தால் தான் படம் விற்பனையாகிறது. அந்தக் காலத்தில் அப்படியில்லை. படத்தின் முக்கிய சம்பவம் வெளி நாட்டில் நடப்பதாக அமைந்தால் தான் வெளிநாடு போவார்கள்.



'பைலட் பிரேம்நாத்' படத்தில் மாலினி பொன்சேகாவுடன்...

அது போலத்தான் 'சிவந்த மண்' படப்பிடிப்பிற்காக டைரக்டர் ஸ்ரீதருடன் ஸ்விட்சர்லாந்துக்கு சென்றேன். இப்படி ஒரு சில படங்களுக்காக சில வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறேன்.

டி.எஸ்.என்: 1962இல் அமெரிக்கா சென்ற பின்பு, மீண்டும் அந்த நாட்டுக்குச் செல்கின்ற வாய்ப்பு ஏற்பட்டதா?

சிவாஜி: சொந்த விஷயமாக ஓரிரு முறை என் மனைவி, மகன்கள் எல்லோருமே சென்றிருக்கிறோம். என்னுடைய தம்பி சண்முகத்தின் மகள் முரளி என்பவன் அவன் எனக்கும் மகன்தான். அவன் அமெரிக்காவில் சிட்டிஸன் ஷிப் பெற்று செட்டிலாகிவிட்டான். உயர் படிப்பிற்காக அவனை அமெரிக்காவிற்கு அனுப்பினேன் . நம் நாட்டில் பல இளைஞர்கள் செய்வதுபோல , அவனும் படிக்கப் போன இடத்தில் ஒரு அமெரிக்கப் பெண்ணைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டான்.

அவள் பெயர்லிண்டா மிகவும் நல்ல பெண் அவர்களுக்கும் குழந்தைகள் இருக்கின்றனர். சாந்தி, ஷேன், கள்ளன் என்பது அவர்கள் பெயர் என் மருமகளுக்கும் பேரன், பேத்திகளுக்கும் என் மீது அதிக பிரியம்.

அவர்கள் விரும்பிக் கூப்பிட்டால் இரண்டு மூன்று தடவை அமெரிக்கா சென்று வந்திருக்கிறேன் .முரளியின் தம்பி கிரியும் என்னுடன் வந்திருக்கிறான் சமீபத்தில் அங்கே ஒலிம்பிக் நிகழ்ச்சிகளையும் பார்த்திருக்கிறேன்.

என் மகள் தேன்மொழியின் பெண் பிரியதர்ஷிணியும், மாப்பிள்ளையும் இப்போது அமெரிக்காவில்தான் இருக்கிறார்கள்.பிரபுவின் மகன் விக்ரமும் அங்கு தான் உயர் கல்வி படிக்கிறான். அதனால் அவ்வப்போது அமெரிக்கா போய் வர வேண்டியிருக்கும்.

என்னைப் பொறுத்தவரை யாதும் ஊரே ...The world is Small பரந்த மனப்பாண்மை உடையவனுக்கு, உலகம் மிகச் சிறியதுதான். (தொடரும்)

# ஊடக விருது வழங்கலுக்கான விண்ணப்பத்திகதி நீடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நல்லதொரு ஊடகப் பாவனையை ஊக்குவிக்கும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளபொதுமக்கள் ஊடக சேவை 2005/2006 விருது வழங்கும் நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்களை ஏற்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றவிருக்கும் ஊடகவியலாளர்கள் -சுய விண்ணப்பங்களை விண்ணப்பிப்பதற்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை அவகாசம் வழங்குவதற்கு பொதுமக்கள் ஊடக சேவை விருது வழங்கும் ஏற்பாட்டாளர்களான 'இணக்கப்பாட்டுக்கான குரல்' நிகழ்ச்சித்திட்டம்தீர்மானித்துள்ளது.

ஆரம்பத்தில் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் இம் மாதம் கடைசியாகத் தீர்மானித்திருந்த போதும் ஊடக அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்களது வேண்டுகோளுக்கமைய விண்ணப்பங்களை ஏற்கும் திகதியை நீடிப்பதற்கு 'இணக்கப்பாட்டுக்கான குரல்' நிகழ்ச்சித் திட்டத்தின் பங்காளர்களின் ஊடக அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

ஊடகத்தில் பொதுமக்களின் சேவைகளுக்கான விழுமியங்களை மேம்படுத்தும் நோக்கில் அயராது உழைக்கும் பிராந்திய ஊடகவியலாளர்களின் சேவையைப்பாராட்டு முகமாக பொதுமக்கள் சேவைக்கான ஊடக விருது எனும் நிகழ்ச்சித் திட்டம் இலங்கையின் ஊடக மீள் கட்டமைப்பு வரலாற்றில் முதல் தடவையாகவே பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஊடக சேயையாளர் ,தொழிற்சங் சம்மேளனம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் தொழிற்சங்கம் , இலங்கை தமிழ் ஊடக ஒன்றியம் , இலங்கை முஸ்லிம் ஊடக இயக்கம்என்பன ஒன்றிணைந்து இவ் விருது வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றன.

அவ்வவ் மாகாண மட்டத்தில் மாகாண நம்பிக்கைப் பொறுப்பு உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படும்பொது மக்ளுக்கான ஊடகசேவை விருது வழங்கும் நிகழ்ச்சியில் வெற்றி பெறுவோருக்கு மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும்பரிசுகள் வழங்கப்படும்.

விருது பெறுவதற்கான வாய்ப்பு மாகாண ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் உண்டு. பொதுமக்கள் ஊடக சேவை விருது தொடர்பான விபரங்களுக்கு , 'இணக்கப்பட்டுக்கான குரல்' நிகழ்ச்சித்திட்டம், பொது மக்கள் ஊடக சேவை விருது வழங்கல் 24/2 , 28ஆம் ஒழுங்கை ஃப்ளவர் வீதி, கொழும்பு-7 எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் தொலைபேசி இல 0112573279, 0115 675906 . (க-7)

# சந்திரிகாவின் மாதிவல நிலம் ஒப்படைப்பின் பின்னணி என்ன?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு வழங்கப்பட்ட மாதிவல காணியைத் திருப்பிக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக ஏனைய சலுகைகளை மீளப் பெறத் தீர்மானித் துள்ளார் என்று அவரின் செயலாளர் பியதாச திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியம், உத்தியோக பூர்வ வாசஸ்தலம் , உத்தியோகபூர்வ இல்லத்தைக் கொண்டு நடத்துவதற்கான கொடுப்பனவு , மின்சாரம் மற்றும் நீரிற்கான கட்டணத்திற்கான கொடுப் பனவு ஆகியவற்றைப் பெறப் போவதில்லை என்று அறிவித்துவிட்டு இந்தக் காணியை சந்திரிகா பெற்றுக் கொள்ளவதாக கூறியிருந்தார்.எனினும் மாதிவல காணியை மீண்டும் ஒப்படைத்துவிட்டு அந்த சலு கைகளை மீள அனுபவிப்பதற்கு அவர் தீர்மானித் துள்ளார்.

இதற்கமைய சுதந்திர சதுக்கத்திலுள்ள 29 ஆம் இலக்க இல்லத்திற்குச் செல்வதற்கு சந்திரிகா தீர்மானித்துள்ளார். தற்போது சுதந்திர சதுக்கத்திலுள்ள வீட்டில் திருத்த வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்தப் பணிகள் நிறை வடைந்த பின்னர் சந்திரிகா அந்தவீட்டிற்குச் செல்லவுள்ளார்.

சந்திரிகா குமாரதுங்கவிற்கு முன்னர் 62 வாகனங்கள் வழங்கப்படுவதாக இருந்த போதிலும் தற்போது 36 வாகனங் களே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 18 மோட்டார் சைக்கிள்கள் அடங்குகின்றன. எஞ்சிய 18 வாகனங்களில் 4 குண்டுத்துளைக்காத கார்கள், 2வி.ஐ.பி ஜீப்கள் , 3 குண்டு துளைக்காத பென்ஸ் கார்கள் , 7 ஜீப் கள், 1 வான் மற்றும் 1.வி.ஐ.பி பேரூந்து என்பன அடங்குகின்றன . (க)

# ஜோர்தான் இலங்கை தூதரகத்தில் 60க்கும் மேற்பட்ட தமிழர்கள் தஞ்சம்

(கொழும்பு)

ஜோர்தான் இலங்கைத் தூதரகத்தில் 60க்குமேற்பட்ட இலங்கைத் தமிழர் தஞ்சம் புகுந்துள்ளனர். ஜோர்தானில் தொழில்வாய்ப்பு பெற்று இரண்டு வருடங்களைப் பூர்த்திசெய்த மற்றும் அதற்கு முன்னர் சேவையிலிருந்து விலகி நாடு திரும்ப முடியாத 60க்கும் மேற்பட்ட இலங்கையர்களே அந்நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இலங்கையர்களின் சேவைக் காலம் முடிவுற்ற பின்னர் சில தொழில் தருணர்களினால் அவர்கள் சார்பில் அரசுக்கு செலுத்த வேண்டிய விசாக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் என்பவற்றை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதமே இதற்குக் காரணம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் தலைவர் , ஜகத் வெல்லவத்த தெரிவித்தார்.

இது தொடர்பாக அண்மையில் ஜோர்தான் பயணமான தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்தன அந்நாட்டு உள்துறை அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியது பலனாக தஞ்சம்புகுந்தவர்களை இலங் கைக்கு அனுப்புவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளவர்கள் தொடர்பான அறிக்கையை ஜோர்தான் உள்துறை அமைச்சருக்கு சமர்ப்பிக்க அமைச்சர் அதாவுட செனவிரத்தன நடவடிக்கை எடுத்துள்ளதாக வெல்லவத்த கூறினார். (க)

# சைக்கிள் உரிமத்தகடு

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபையினால் 2006ஆம் ஆண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பிரதேச சபை யின் புலோலி உப அலுவலகத்தில் வைத்து இவ் உரிமத்தகடுகள் வழங்கப்பட்டுவருகின்றது. ஆகவே சைக்கிள் உரிமையாளர்கள் அவ் உரிமத் தகட்டை பெற்றுக்கொள் ளுமாறு பிரதேச சபை கேட்டுள்ளது. (த-35)

# கணித, விஞ்ஞான பாடங்களை பயில மாணவர்கள் தயக்கம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கணித, விஞ்ஞான பாடங்களை ஆர்வத்துடனும் மன விருப்பத்துடனும் கற்க விரும்பும் மாணவர்களின் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் கலைப்பீட பாடங்களைப் பயில்வதில் ஆர்வம் காட்டுகின்றவர்களே அதிகமாகவுள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் கல்விச் செயல் திட்டப் பொறுப்பாளரான க.பேரின்பநாதன் சாவகச்சேரி மகளிர் வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட கணித, விஞ்ஞான மூல வள நிலையத்தின் திறப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனப் பிரதிநிதி தொடர்ந்து பேசும்போது,

இன்றைய நிலையில் கல்வியை கோட்பாட்டு ரீதியாகச் செய்வதால் எத்தகைய பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. மாறாக, செயல்பாட்டு ரீதியான கற்பித்தல் நடவடிக்கையை ஊக்குவிக்கும் நோக்கத்துடனேயே இவ்வாறான மூலவள நிலையத் திட்டத்தினை ஊக்குவித்து வருகின்றோம்.

இதேசமயம் தென்மராட்சி கல்வி வலயத்தில் மிக விரைவில் பிள்ளைநேயப் பாடசாலைத் திட்டத்தையும் ஆரம்பிக்கவுள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்குகொண்டிருந்த தீவகக் கல்விப் பணிப்பாளர் தமதுரையின்போது,

இன்று எமது பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுவரும் கற்றல், கற்பித்தல் முறைகளை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது.

நாம் உருவாக்குகின்ற மாணவர்கள் சர்வதேசிய மட்டத்தில் செயல்படக்கூடியதாக ஆக்குதல் வேண்டும். மாணவர்களின் கற்றல் செயல்பாடுகள் செவிமூலம் அல்ல உணர்வுபூர்வமாக ஏற்படுத்தப்படவேண்டும்.

மேலும், எமது பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் வளங்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் நாம் அவற்றைப் பயன்படுத்தாமல் இருந்துவருவது துர் அதிஷ்டவசமானதாகும்.

இதற்காகவே தென்மராட்சி கல்வி வலயத்தின் சார்பாக கணித, விஞ்ஞான மூலவள நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது பாராட்டுக்குரியதாகும் எனக் குறிப்பிட்டார்.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவரான டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் அங்கு உரையாற்றும்போது,

யுத்தத்தினால் அழிந்த நிலையில் இருக்கும் தென்மராட்சி பிரதேசத்தில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து நாம் மகிழ்வடைகின்றோம். இங்கு பயில்கின்ற மாணவர்கள் மத்தியில் கணித, விஞ்ஞான பாடங்களில் செயல்பாட்டு ரீதியான கற்றல் நடவடிக்கைகளை மேன்மைப்படுத்துவதற்காக இப்போதைய கல்விப் பணிப்பாளர் எடுத்துவருகின்ற முயற்சிகளை நாம் அனைவரும் பாராட்ட வேண்டும்.

எங்கெங்கு அரசு தனது பங்களிப்பை நிறைவுறச் செய்யத் தவறுகின்றதோ அங்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது உதவிகளை வழங்கி ஊக்குவித்து வருகின்றன.

அவ்வகையில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனமானது தென்மராட்சி பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு உதவி வருவது ஊக்கமளிப்பதாகவுள்ளது என்றார்.

கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலய அதிபர் த.முத்துலிங்கம் வடமராட்சி வலய ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி எஸ்.இராதா கிருஸ்ணன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர். (க-16)

## அலங்கார உற்சவமும் சங்காபிஷேகமும்

பருத்தித்துறை- புலோலி மத்தி அருள்மிகு அவ்வொல்லைப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவமும் 108 சங்காபிஷேகமும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6மணிக்கு நடைபெறவுள்ளது.

இவற்றைத் தொடர்ந்து சொற்பொழிவு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-104)

## நாட்டுப் பற்றாளர் சாவு

(கிளிநொச்சி)

சுகவீனம் காரணமாக 12.11.2005 அன்று நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் மாணிக்கம் என்றழைக்கப்படும் பொற்பதி வீதி அரசடிப் பிள்ளையார் கோவிலடி, கோண்டாவில் வடக்கு யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகவும், வலது கரை முத்துவிநாயகபுரம் முத்துளியன் கூட்டு ஒட்டுசுட்டானை தற்காலிக முகவரியாகவும் கொண்ட நீலமுகம் மாணிக்கம் என்பவரே சாவடைந்தவராவார். (க-4)

## நிதி ஒதுக்கீடு

வரணி- நாவற்காட்டு பகுதியில் பொது மண்டபம் அமைப்பதற்கு ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் திட்டத்தின் கீழ் இம்மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

அங்குள்ள கிராம முன்னேற்ற சங்க கட்டடத்தையும் புனரமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-108)

# ஆலய நிர்வாக சபைக் கணக்காளர் கடுமையாகத் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஆலய நிர்வாக சபைக் கணக்காளரை ஆலய பிரதம குருக்கள் இருவர் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.



இச்சம்பவம் நேற்று முன்தினம் நயினாதீவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லையா சுதர்சன் (வயது-26) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய நிர்வாக சபையில் 2003ஆம் ஆண்டு முதல் கணக்காளராக செ.சுதர்சன் இருந்துள்ளார்.

இவர் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் பணிபுரியும் பிரதம குருக்கள் ஒருவருக்கு கடனாக ஒரு தொகைப் பணத்தை வழங்கியதாகவும், அந்தக் கடனை குறிப்பிட்ட காலங்களின் பின் திருப்பிக் கேட்டபோது அவர் தனது சம்பளத்தில் கடனை கொஞ்சம் கொஞ்சமாக கழிக்குமாறும் கூறியுள்ளார்.

அதற்கமைவாக அவரது சம்பளத்தில் இருந்து சிறு தொகைப்பணம் கழிக்கப்பட்டு வந்ததாகவும் இந்நிலையிலேயே கடனைப் பெற்ற பிரதம குருக்களும் அவரது மகனும் கணக்காளரை திடீரென கடுமையாகத் தாக்கியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட கணக்காளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய நிர்வாகத்தை ஊர்காவற்றுறை நீதிமன்றம் பொறுப்பெடுத்து தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-132,133)

## ஓய்வூதியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

வலி தெற்கு அரச ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சங்க செயலாளர் திருமதி கல்யாணசுந்தரேசன் தெரிவித்துள்ளார். (க-122)

# கிணறுகளை புனரமைத்து தருமாறு கோரிக்கை!

இணுவில் பகுதியில் உள்ள விவசாயிகள் தமது பகுதியில் உள்ள கிணறுகளை புனரமைத்துத் தருமாறு வலிகாமம் பிரதேச சபையைக் கேட்டுள்ளனர்.

விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த கிணறுகள் பல தூர்ந்து போயுள்ளதாகவும், இதனால் இக்கிணறுகளை புனரமைத்து தருமாறும் இணுவில் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.திருக்குமார், வலிகாமம் பிரதேச சபையிடம் கடிதமூலம் கேட்டுள்ளார்.

விவசாய நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்ட பல கிணறுகள் தூர்ந்து போயுள்ளதாகவும், சில கிணறுகளில் கால்நடைகள் விழுந்து இறப்பதாகவும் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள திருக்குமார் அக்கிணறுகளை பாதுகாப்பான முறையில் புனரமைத்துத் தருமாறும் கேட்டுள்ளார். (க-122)



யாழ். வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் சுப்பிரமணியம் கர்மேஸ்வரன் நேற்று முன்தினம் யாழ். வைத்தியசாலை சுத்திகரிப்பு தொழிலாளர்களால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

(படம்: திலீவின்பன்)







யாழ்ப்பாண மாநகர வதிவோர் வரியிறுப்பாளர் சங்கத்தின் கலந்துரையாடல் கண்டிவீதியில் உள்ள பஸ்தியான் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சங்கத்தலைவர் மு.சின்னத்துரை, சங்க உப தலைவர் எஸ்.சவரிமுத்து மங்களவிளக்கினை ஏற்றுவதனையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: திலீவின்பன்)

நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் எப்போதும் அதிகமாக யாதொரு இடையூறுமின்றி நடைபெற வேண்டும் என்று எண்ணினால் நாம் உலகத்தில் எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கமாட்டோம். -ராஜாஜி

வலம்புரி

# சமயங்களை மதிக்கும் பொது நியதி தேவை

முஸ்லிம்களின் வழிபடு கடவுளாக இருக்கக் கூடிய நபிகள் நாயகத்தை கேலி செய்யும் வகையில் வெளிநாடொன்றின் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேலிச் சித்திரம் முஸ்லிம் மக்களைப் பெரிதும் பாதித்து விட்டது.

மனித வாழ்வில் சமயம் என்பது மிகவும் அத்தியாவசியமான நெறிமுறையாகும். இன நம்பிக்கை, பண்பாட்டுப் பின்னணிகள், கலைப் படைப்புகள் என்பன மனிதனை உளவியல் ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் வழிப்படுத்துகின்றன.

உலகில் வாழ்கின்ற பல்லின மக்கள் பல்வகைச் சமயங்களைப் பின்பற்றுகின்றனர். இவ்வாறு வேறுபட்ட சமயங்களைப் பின்பற்றினாலும் சமயங்களின் இலக்கு மனிதனை நெறிப்படுத்துவதாகும்.

பாதைகள் வேறுபடலாம், பயணிக்கும் முறைமைகள் வேறுபடலாம், ஆனால் சென்றடைகின்ற இடம் ஒன்றாகவே இருக்கும்.

ஒரு நாட்டிற்கான பயணத்தில் தரை, கடல், ஆகாயம் மார்க்கமான போக்குவரத்துச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப் போக்குவரத்துச் சாதனங்களின் இலக்கு குறித்த இடத்தை அடைவதாகவே இருக்கும்.

எனவே இங்கு அதுவா? இதுவா? சரி என்ற வாதங்களை விடுத்து எல்லாச் சமயங்களுமே மனிதனை ஒழுங்குபடுத்துகின்றன என்ற கொள்கையை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதைவிடுத்து ஒவ்வொருவரும் தத்தம் சமயமே உயர்வானது எனக் கருதிக் கொள்வார்களாயின் அதன் விளைவு சமயப் போராகவே இருக்கும்.

சமயங்கள் மனிதர்களை நெறிப்படுத்துவதற்கான தத்துவங்களை மானிட சமூகத்திற்குத் தந்துள்ளன. இதனைப் பின்பற்றும் வகைமையை செம்மையாக வெளிப்படுத்தும் பாரிய கடமைப்பாடு சமயத் தலைவர்களுக்கே உண்டு.

சமயத் தலைவர்களின் போதனை ஊடாகவே சமய நெறிகள் மக்களைச் சென்றடைகின்றன. இதில் ஏற்படுகின்ற பிறழ்வுகள், திணிப்புகள் மனிதனை வழிப்படுத்துவதற்கு மாறாக அவனின் வாழ்வியலையே சின்னாபின்னமாக்கிவிடும்.

இதன் ஒரு பக்கத்தையே அண்மைக் காலமாக முஸ்லிம் மக்களின் எதிர்ப்பும், கொந்தளிப்பும் வெளிப்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக ஊடகங்கள் சமயம் தொடர்பாக கையாளுகின்ற போது மிகுந்த பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

சமய ரீதியாக மக்களைக் கேலி செய்யும் நிகழ்வுகள், ஒட்டுமொத்தமாக தடை செய்வதற்கான பொது நியதியை ஏற்படுத்துவது உலகின் முன்னிருக்கின்ற மிகப் பெரிய கடமைப்பாடாகும்.

## மெல்லக் கற்கும் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளது

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் மெல்லக் கற்கும் மாணவர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுவதாக கல்வி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இத்தகைய மாணவர்களின் கல்வி வளர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கு கல்வி வலயங்களினால் பல்வேறு செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் கூட, இவர்களின் விடயத்தில் மிகக் கூடுதலான அக்கறையும் ஆர்வமும் காண்பிக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளதாக அதிபர்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

மெல்லக் கற்கும் மாணவர்களின் கல்வி நிலை குறித்து அவர்களின் பெற்றோரில் 90 சதவீதத்தினருக்கு போதிய தகவல் எதுவும் தெரியாமல் இருப்பது பற்றியும் தெரியவந்துள்ளது.

அத்துடன் தமது பிள்ளைகளின் கல்வி நிலை குறித்து அக்கறையும் ஆர்வமும் காட்டாத நிலையில் பல பெற்றோர் இருந்து வருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (கு-16)

## யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்தே ஜெனீவாவில் பேச்சு!

### க.கா. குழு தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இனங்காணப்பட்டுள்ள விடயங்கள் குறித்தே ஜெனீவா பேச்சுவார்த்தையில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இப் பேச்சுவார்த்தை இலங்கையின் எதிர்கால சமாதான முயற்சிகளுக்கு தீர்க்கமான முடிவைத் தரும் என்று அக் குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கிடையில் பேச்சுவார்த்தை நடைபெறும் போது இவ் விடயங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப் படும். இதன் பலாபலன்களிலேயே எதிர்காலப் பேச்சுவார்த்தைகள் தங்கியிருப்பதாகவும் கண்காணிப்புக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. (கு-4)

# குமாரபுரம் படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

(திருகோணமலை)

திருகோணமலை குமாரபுரம் படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவு கூரல் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இராணுவத்தினரால் 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதியன்று குழந்தைகள், அப்பாவி பொதுமக்கள் உட்பட 26 பேர் கிளிவெட்டி பகுதியின் குமாரபுரத்தில் படுகொலை செய்யப்பட்டனர். இதில் 30 பேர் படுகாயமடைந்தனர். 2 தமிழ்ப் பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு படுகொலைசெய்யப்பட்டனர். படுகொலையானவர்களின் நினைவு கூரல் நிகழ்வு குமாரபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 26 பேரின் புகைப்படங்களும் நிகழ்வில் வைக்கப்பட்டிருந்தது.

கிராம மக்கள் சுடரேற்றி மலர்வணக்கம் செலுத்தினர்.

குமாரபுரம் கிருஸ்ணன் ஆலயத்தில் படுகொலை செய்யப்பட்டோர் நினைவாக சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. அதன் பின்னர் குமாரபுரம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் எஸ். ஜேசுதாசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

14 குழந்தைகளை இராணுவம் படுகொலை செய்தது. 5 வயதுக்குக் குறைவான 3 குழந்தைகள், 5 முதல் 10 வயதுக்குட்பட்ட 3 பேர், 11 முதல் 20 வயதுக்குட்பட்ட 8 பேர், 21 முதல் 30 வயதுக்குட்பட்ட 6 பேர், 31 முதல் 40 வயதுக்குட்பட்ட இருவர் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட இருவர் என்று இராணுவத்தினர் வெறியாடிக் கொன்றனர்.

இந்தப் படுகொலை தொடர்பாக 9 படையினர் கைது செய்யப்பட்டனர். 10 ஆண்டுகளாகியும் திருகோணமலை நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு காத்திருக்கிறது.

இந்தப் படுகொலை தொடர்பான சாட்சியங்களும் படுகொலைக்கான ஆயுதங்களும் கடந்த ஆண்டு கொழும்பு இரசாயன பகுப்பாய்வுக் கூடத்தில் நடந்த தீ விபத்தில் எரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## அமைதியான முறையில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்

### பொலிஸ் மா அதிபர் வேட்பாளர்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் அமைதியான முறையில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றிலேயே வன்செயல்களற்ற தேர்தலாகும்.

தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தல்களையும், வன்செயல்கள் எதுவுமின்றி நடத்துவதற்கு ஒத்துழைக்குமாறு பொலிஸ் மா அதிபர் சகல அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, பொலிஸார் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கும் மக்களுக்கு பூரண பாதுகாப்பளிப்பார்கள் என்றும் பொலிஸ்மா அதிபர் உறுதி கூறினார். (கு-7)

## சேவை விஸ்தரிப்பு

(கொழும்பு)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சேவைகள் விஸ்தரிக்கப்படும். இந்தத் திட்டத்தின் முதலாவது கட்டத்துக்கு அமைய, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு நாடு முழுவதிலும் இந்த அதிகாரசபையில் மாவட்ட அலுவலகங்களை நிறுவவுள்ளது.

இந்த நடவடிக்கை பின்தங்கிய பகுதிகளில் உள்ள மக்கள், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்ய வழிவகுக்கும்.

தற்போது சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக முறைப்பாடுகள் செய்வதற்கு மக்கள் கொழும்புக்கே வரவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7)

## கணித, விஞ்ஞான மூலவள நிலையம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்துக்கான முதலாவது கணித, விஞ்ஞான மூலவள நிலையம் ஒன்று சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய வளாகத்தில் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இம் மூலவள நிலையத்தின் கணித நிலையத்தினை தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும், விஞ்ஞான நிலையத்தினை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் கல்விப் பொறுப்பாளர் எஸ்.பேரின்பநாதனும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தனர்.

இம் மூலவள நிலையத்துக்கான அடிப்படைத் தேவைகளையும் இலத்திரனியல் உபகரணங்களையும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் அன்பளிப்பாக வழங்கி வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.வி. வரதராஜமூர்த்தி, அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், தீவகக் கல்விப் பணிப்பாளர், சேவைக் கால ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

இம் மூலவள நிலையத்தில் கணித, விஞ் ஞான பாடங்களுக்கான நவீனத்துவ உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (து-16)

## உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஏப்ரலில்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எனினும் பரீட்சை நடத்தப்படும் திகதியில் மாற்றம் ஏற்படக் கூடும் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய திட்டத்தின் படி ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி முதல், தொடர்ந்து 22 நாட்களுக்கு இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது. இந்தக் காலப் பகுதியில் சனி, ஞாயிறு, அரச விடுமுறை ஆகிய தினங்களில் பரீட்சைகள் நடைபெறமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-7)

## ஈரானுக்கு எதிராக வாக்களிப்பு; அரசைக் கண்டிக்கிறது ஜே.வி.பி!

(கொழும்பு)

அமெரிக்காவின் ஆதரவுடன் கொண்டு வரப்பட்ட ஈரான் எதிர்ப்பு தீர்மானத்தின் மீது இலங்கை ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் அரசாங்கத்துக்கு ஜே.வி.பி கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இது தொடர்பில் மஹிந்தவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், அரசாங்கத்துக்கு நீண்டகாலமாக உதவி வரும் ஈரானுக்கு எதிராக நிலைப்பாடு மேற்கொண்டுள்ளமை ஆட்சேபனைக்குரியது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கடைப்பிடித்து வரும் ஏகாதிபத்திய ஆதரவு நிலைப்பாட்டையே அரசாங்கமும் தொடர்ந்து பின்பற்றுகிறது. வெனிசூலா உள்ளிட்ட 3 நாடுகள் அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்துள்ளமை பாராட்டுக்குரியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



இந்த உலகம் மாபெரும் பைத்தியக்கார விடுதி. இதில் வாழும் அனைவரும் பைத்தியங்கள். சிலருக்கு பணத்தின் மீது பித்து. மற்றும் சிலருக்கு பெண்கள் மீது பித்து. வேறு சிலருக்கு பெயரிலும், புகழிலும் பித்து. சிலருக்குத் தான் கடவுள் மீது பித்து. நான் கடவுள பைத்தியமாக இருக்கவே விரும்புகிறேன்.

சுவாமி விவேகானந்தர்

# ஜெனீவாவிலும் '20க்கு40' கணக்கிடுவாரா அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா?

## கிண்டலடிக்கின்றது ஜே.வி.பி

(கொழும்பு)

**அரசியலில் 20-க்கு40 என்ற அடைமொழியுடன் அழைக்கப்படுகின்ற அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை ஜெனீவாப் பேச்சுக்கான குழுவாக அரசாங்கம் நியமித்திருப்பதால் ஜே.வி.பி கலக்கம் அடைந்திருப்பதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.**

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி. கூட்டணி அமைத்தது.

சுதந்திரக் கட்சியணியில் போட்டியிட்ட ஜே.வி.பி 25 ஆசனங்களைத் தான் கேட்டிருந்தது. ஜே.வி.பியுடன் ஆசனப் பகிர்வுப் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்த நிமல் சிறிபால டி சில்வா, திருகோணமலை அம்பாறை உள்ளிட்ட சில மாவட்டங்களில் தகுதியான சுதந்திரக் கட்சி வேட்பாளர்கள் இல்லை என்பதால் 19 ஆசனங்களைக் கூடுதலாக ஜே.வி.பிக்கு அளித்திருக்கின்றார்.

ஜே.வி.பி கேட்டது என்னவோ 20, நிமல் சிறி டி சில்வா தொடுத்தது என்ன 40, ஆகையால் நிமல் சிறிபால டி சில்வாவை ஜே.வி.பியினர் சிங்களத்தில் 20-க்கு40 என்று புனை பெயரிட்டு அழைத்து வந்தனர்.

தற்போது அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களின் அடிப்படையில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுக்கு அடுத்திருக்கும் மூத்த அமைச்சர் என்ற வகையில் நிமல் சிறிபால டி சில்வா ஜெனீவாப் பேச்சுக்கான அரசாங்கத்தின் குழுவின் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் கூட்டணியைப் போலவே விடுதலைப்புலிகளுடன் நடத்துகிற பேச்சுக்களிலும் 20-க்கு 40 என்ற கணக்கில் விட்டுக் கொடுப்புக்களை நிமல் சிறிபால டி சில்வா செய்து விடுவாரோ என்ற அச்சம் ஜே.வி.பியிடம் எழுந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

பேச்சுவார்த்தைகளுக்கான குழுவிற்கு அறிவு போதிக்கும் பயிலரங்கக் கூட்டம் கொழும்பில் நடத்தப்பட்ட போது நிமல் சிறிபால டி சில்வாவின் செயற்பாடுகள் ஜே.வி.பியினரை மேலும் கலக்கம் அடையச் செய்திருப்பதாகவும் தெரிகின்றது. (ச-4)

# கைக்குண்டை வெடிக்க வைத்து காதலர்கள் தற்கொலை!

(கொழும்பு)

கிரிபத்கொட காலி சந்தியில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் காதலர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம் பெற்றுள்ளது. கடவத்தையிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த பஸ்ஸில் சென்ற இவர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக கிரிபத்கொட காலி சந்தியில் இறங்கியுள்ளனர்.

பின்னர் காதலன் தன்னிடமிருந்த கைக்குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளார்கள்.

இதில் நில் அஜந்தகுமார(வயது-29) என்ற இளைஞனும் ஆராய்ச்சிகே லாவணி(வயது-33) என்ற யுவதியுமே உயிரிழந்துள்ளனர்.(ச-39)



யுனிசெவ் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கு மிடையிலான சந்திப்பொன்று விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இச்சந்திப்பின் போது வடக்குக் கிழக்கில் நிலவும் அசாதாரண நிலைமைகளினால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இச் சந்திப்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகளைப் படத்தில் காணலாம்.

## ஜெனீவா...

கலந்தாலோசித்தனர். இந்நிலையில் எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையில் தகுதிவாய்ந்த பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு அண்மையில் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதற்கமைய நாங்கள் யாரை அனுப்புவது என்று கலந்துரையாடிக் கொண்டு இருக்கிறோம். இந்நிலையில் பாயிஸ் முஸ்தபாவை இப் பேச்சுவார்த்தைக்கு அனுப்பலாம் என்று ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டேன். அதற்கும் அவர் அனுமதி வழங்கினார்.

இருந்தும் கிழக்கிலிருந்து ஒரு பிரதிநிதியினை நியமிக்குமாறு மற்றைய முஸ்லிம் அமைச்சர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். அது தொடர்பாக நாளை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியினர் அனைவ ரும் ஒன்று சேர்ந்து தீர்மானிக்கவுள்ளோம் என அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

இவ்வாறு நியமிக்கப்படும் பிரதிநிதி முஸ்லிம்களின் பாதுகாப்பு, பொருளாதாரப் பிரச்சினை என்பவற்றுடன் தமிழ்மக்களுடன் முஸ்லிம்கள் இணைந்து செயற்படக் கூடிய வழிமுறைகள் சம்பந்தமாக ஜெனீவாப் பேச்சு வார்த்தையில் கலந்துரையாடுவாரென அமைச்சர் பௌசி தெரிவித்தார். (ச-4)

# யுத்தநிறுத்த மீறல்களைக் கட்டுப்படுத்த ஒப்பந்தத்தை சீராக்குவது அவசியம்

## இலங்கைக்கான கொரியத் தூதுவர்

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்களைக் கட்டுப்படுத்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கொரியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஜி.விஜயசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொரிய ஊடகமொன்றிற்கு அவர் அளித்த நேர்காணலில்;

வன்முறைகள் விரிவடைந்து யுத்தநிறுத்தம் கேள்விக்குள்ளாகிய நிலையில் கடைசியாக பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்தப் பிரச்சினையானது அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையேயானது மட்டுமே. மக்களுக்கிடையில் எதுவித பிரச்சினையும் இல்லையென அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களின் முறைப்பாடுகள் நியாயபூர்வமானவை. அந்தப் பிரச்சினைக்கு அரசியல் வழியான தீர்வுதான் சரியானது. இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிக்கையில் யுத்தநிறுத்த மீறல்கள் பற்றி தெரிவித்திருக்கின்றது. யுத்தநிறுத்த மீறல்களைக் கட்டுப்படுத்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வது அவசியமாகும். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்குமாறு விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றார் அவர். (ச)

## பவ்ரல்...

தலில் வாக்களிக்கும் தகைமையை இழந்துள்ளனர்.

2005 ஆம் ஆண்டிற்கான தேர்தல் பதிவிற்கு இணங்க வாக்காளர்களை வாக்களிக்க அனுமதிக்க வேண்டுமென்ற எமது வேண்டுகோள் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

எப்படியிருப்பினும் வாக்களிப்பதற்கான தகுதியைக் கொண்டிருக்கும் வாக்காளர்களுக்கு அவர்களது உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றோம் என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ச-9)

## தனித்துப்...

சகல உள்ளூராட்சி மன்றங்களுக்குமான வேட்புமனுக்களை அன்றைய தினத்தில் தாக்கல்செய்யப் போவதாக கட்சியின் கொள்கை யாக்காளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். இதேவேளை சகல மாகாணங்களிலும் இத் தேர்தலில் தனது கட்சி தனித்தே போட்டியிடும் என்றும் அவர் கூறினார். (ச)

## உள்ளூராட்சித் தேர்தலில்...

புளொட் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் சுப்பிரமணியம் பகீரதன் தலைமை வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஆரையம்பதி பிரதேச சபைக்கு புளொட் அமைப்பைச் சேர்ந்த யோகேந்திரன் சிவச்சந்திரகுமார் மற்றும் வெல்லாவெளிப் பிரதேச சபைக்கு திருமதி அருளானந்தம் நவ ரஞ்ஜினி என்பவரும் தலைமை வேட்பாளராக போட்டியிடுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-4)


YOGI'S

Academy of Beauty Culture Hair Dressing and Home Science

புதிய வகுப்புக்கள் 18.02.2006 முதல் ஆரம்பமாகவுள்ளன.

01. அழகுக் கலை, நவீன முறையிலான ஒப்பனை, தலை அலங்காரங்கள் புத்தம்புதிய திருப்பங்கள், மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படும்.
02. கேக் ஐசிங், மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள், மாச்சீனி மலர்கள், புதிய வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

பயற்சி பெற விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்

YOGINI SHANMUGANATHAN
Dip in.HIGH TECH AESTHETICIAN (INDIA)
Dip in. ADVANCED BRIDAL MAKE - UPand CHARACTER MAKE- UP (INDIA)

75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)














திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்
வருடாந்த மகோற்சவம்
2ம் திருவிழா

பிள்ளையார் வாழி!

சீராருஞ் சைவநெறி சிறப்புற் றோங்கச்
சேருசிவா கமஞானந் தெளிவுற் றோங்க
நீராரும் வயற்செந்நெல் நிறைவுற் றோங்க
நீளுமற மென்னான்கும் நிலையுற் றோங்கச்
சேராருஞ் சேர்திருநெல் வேலி யோங்கத்
திகழுபழங் கிணற்றடியின் தெய்வ மென்னக்
காராருங் கஜமுகத்துப் பிள்ளை யார்தங்
காருண்ய லாவண்யங் கனிந்து வாழி!

-ச.தங்கமாமயிலோன்

விளம்பர அன்பளிப்பு:-
ஆறுமுகம் சிற்பாலயம், காளிகோயிலடி திருநெல்வேலி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 13.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.